Registered as a news paper.

பக்கங்கள் இருபது

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விலை ரூபா 10.00

புத்தாண்டு வாழ்த்துக்களுடன்
"கனவு - நனவாகி"
டிஜிட்டல் பெயர்ப்பலகைகள்
டிஜிட்டல் பனர்கள்
டிஜிட்டல் பிறின்ரிங்
MMW
768, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021-2225640, 0773126471

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 01 | ஹிஜ்ரி 1427 ற.அவ்வல் 16 | (14.04.2006) வெள்ளிக்கிழமை | இதழ் 196

# ஒரே நாளில் நான்கு பொதுமக்கள் தென்மராட்சியில் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம் —

தென்மராட்சிப் பகுதியில் ஒரே நாளில் நான்கு பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

24 மணி நேரத்துக்குள் அடுத் தடுத்து இடம்பெற்ற இந்தக் கொலைச் சம்பவங்களால் தென்மராட்சியில் பதற்றநிலை உருவாகியுள்ளது.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் யாழ்.நகரிலுள்ள சாரங்கன் நகைக்கடை உரிமையாளரான பஞ் சாட்சரம் கிருபாகரன் (வயது 36) என் பவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கண்டி வீதி - சாவகச்சேரியிலுள்ள இவரது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இவரது பெயரைக்கூறி அழைத்து துப்பாக்கி யால் சுட்டதில் இவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இறந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

மட்டுவில் பகுதியில் நேற்றுக்காலை 7 மணியளவில் லாண்ட்மாஸ்டர் உரிமையாளர் தம்பிராஜா தயாபரன் (வயது 31) என்பவர் சுட்டுக்கொல்லப் பட்டார்.

சரசாலை தெற்கு - சாவகச்சேரிப்

(12 ஆம் பக்கம் பார்க்க)


# பேச்சு ஒத்திவைப்பு: நோர்வே அறிவிப்பு!

ஒஸ்லோ —

ஜெனிவாவில் அடுத்தவாரம் நடைபெறவிருந்த இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக நோர்வே அரசாங்கம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக நோர்வே வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் டுனே டிஜஸ்டல் கருத்து வெளியிடுகையில் -

தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பாக இலங்கை அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளுடனும் சுவிற்சர்லாந்து அரசுடனும் தொடர்புகளை ஏற்படுத்தியிருக்கிறோம். அத்துடன், சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் இரு தரப்புடனும் ஆலோசனைகளை நடத்திவருகிறார். விடுதலைப் புலிகள் பேச்சுக்களுக்கான திகதிகளை மாற்றியமைக்குமாறு கேட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

அதேவேளை, ஜெனிவாவிலுள்ள இலங்கை தூதரகம் பேச்சுக்கள் ஒத்தி வைக்கப்பட்டது தொடர்பாக தமக்கு எந்தவித தகவல்களும் கொழும்பிலிருந்து கிடைக்கவில்லை என்றும் தொடர்ந்தும் பேச்சுக்கான ஏற்பாடுகளை மேற் கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.



# வன்முறைச் சூழலை அரசு உருவாக்குகிறது!

## விடுதலைப் புலிகள் கடும் கண்டனம்

கிளிநொச்சி —

தமிழர் தாயகப்பகுதிகளில் போர்நிறுத்த சூழலை சீர்குலைத்து மீண்டும் போர்ச்சூழலை இலங்கை அரசும் படைத்தரப்பும் வலிந்து உரு

சனைச் சந்தித்து பேச்சு நடத்தியபோதே இது தொடர்பாக விடுதலைப் புலிகள் தமது கண்ட னத்தை தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களி

அனைவருக்கும்
சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

கிளிநொச்சி ——

தமிழர் தாயகப்பகுதிகளில் போர்நிறுத்த சூழலை சீர்குலைத்து மீண்டும் போர்ச்சூழலை இலங்கை அரசும் படைத்தரப்பும் வலிந்து உருவாக்கி வருவதாக விடுதலைப் புலிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்

நேற்று கிளிநொச்சியில் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக் சனைச் சந்தித்து பேச்சு நடத்தியபோதே இது தொடர்பாக விடுதலைப் புலிகள் தமது கண்டனத்தை தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

(11 ஆம் பக்கம் பார்க்க)

வாழ்த்துக்கள்



## புலிகளின் விடாப்பிடியால் புதிய யோசனை முன்வைப்பு

கிளிநொச்சி ——

கிழக்குப் பிராந்திய தளபதிகளின் பயண ஒழுங்கு விவகாரத்தில் விடுதலைப் புலிகள் விட்டுக்கொடுக்காத போக்கை கடைப்பிடித்ததை அடுத்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு இதற்கான மாற்று யோசனையை முன்வைத்ததாக தெரியவருகிறது.

நேற்றுக்காலை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் ஆகியோரை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிசன் சந்தித்து பேசினார்.

இதன்போது - புலிகள் தரப்பு கிழக்கு தளபதிகளின் பயண ஒழுங்கு தொடர்பான எவ்வித சமரசத்துக்கும் இடமில்லையென அறிவித்திருந் தனர்.

இதனால் ஜெனிவா பேச்சுக்களுக்கு செல்வது புலிகளின் கையிலேயே இருப்பதாக இந்தச் சந்திப்பை முடித்துவிட்டு வெளியே வந்த கண்காணிப்புக்குழுத் தலைவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், அரச தரப்புடன் தொடர்பு கொண்டு பேசிய பின்னர் பிற்பகல் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனை ஹென்றிக்சன் சந்தித்தார்.

இதன்போது கண்காணிப்புக் குழுதலைவரால் முன்வைக்கப்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழு தலைவருடன் கிழக்குத் தளபதிகள் பயணம்!

## நேற்றைய சந்திப்பில் இணக்கம்

கிளிநொச்சி ——

புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதிகள் - கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹென்றிக்சனுடன், சாதா ரண படகு மூலம் வன்னிக்குப் பயணம் மேற்கொள்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடனான நேற்றைய சந்திப்பில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு ஆகியோர் எதிர்வரும் சனிக்கிழமை (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பலியானோர் தொகை 19 ஆகஅதிகரிப்பு!

திருகோணமலை ——

திருகோணமலையில் இராணு வத்தினரும், சிங்களக் காடையர்களும் இணைந்து நடத்திய தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 19 ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் 15 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

கொல்லப்பட்டோரில் 6 பேர் தமிழர்கள், 2 முஸ்லிம்கள், 7 பேர் சிங்களவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். லிங்கநகரில் ஓட்டோவின் உள்ளேயே 3 தமிழர்கள் எரித்துக் கொலை செய்யப்பட்டனர். அந்தச் சடலங்கள் அடையாளம் காணப்பட முடியாத (12 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று நள்ளிரவுடன் நியம நேரம் மாற்றம்!

கொழும்பு ——

இலங்கையின் நியம் நேரம் இன்று நள்ளிரவு 12 மணிமுதல் அரை மணித்தியாலம் பின்னகர்த்தப்படுகிறது. அமைச்சரவை மேற்கொண்ட முடிவின் அடிப்படையில் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன்படி 1996 ஆம் ஆண்டு மே மாதத்துக்கு முந்திய நேரம் இன்று நள்ளிரவு 12 மணிமுதல் நடைமுறைக்கு வருகிறது.


எனவே, இன்று 14 ஆம் திகதி நள்ளிரவு 12.30 ஆகும்போது அதாவது 15 ஆம் திகதி அதிகாலை 12.30 ஆகும்போது இலங்கை மக்கள் தமது மணிக்கூடுகளில் 12 மணியாகக் குறைத்துக்கொள்ளுமாறு அரசாங்கம் கேட்டுள்ளது.

## தென்மராட்சியில் நேற்று சுட்டுக்கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் சடலங்கள்


விஜயகுமார்


கிருபாகரன்


தயாபரன்


இரட்ணசபாபதி

# தாயக விடுதலைக்கான இறுதிப் போரில் இணைய இளைஞர்களுக்கு அழைப்பு!

## யாழ்.மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை அறிக்கை

யாழ்ப்பாணம் —

சிங்கள இனவாத அரசின் கொடுரங்களை உணர்ந்து தற்போது ஏற்பட்டிருக்கும் இக்கட்டான சூழ்நிலையை உணர்ந்து தாயக மீட்புக்கான இறுதிப் போரில் இளைஞர், யுவதிகளை இணைந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட பொங்கி எழும் மக்கள் படை அழைப்பு விடுத்துள்ளது.

இனியும் பொறுமை வேண்டாம் என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கையிலேயே மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

திருகோணமலையில் இனவாதத் தீ பற்றி எரிகிறது. யாழ்.மண்ணில் நாளையும் எம் உயிர்களைக் கருக்கலாம். நெருப்பில் எரிக்கப்படும் எம் மக்களைப் பாதுகாக்க இளைஞர்,யுவதிகளே அணி அணியாக தாயக விடுதலைப் போரில் இணையுங்கள்.

வடக்கிலும், கிழக்கிலும் அறிவிக்கப்படாத பெரும் யுத்தம் ஒன்றை சிங்கள இனவாத அரசும், அதன் கூலிப் படைகளும் தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளது. தமிழ்மக்களைப் படுகொலை செய்யும் சிங்களக் கொலைக்களங்கள் மீண்டும் தமிழ் மண்ணில் உருவாகி வருகின்றது.

திருகோணமலையிலும், ஏனைய தமிழர் தாயக பிரதேசங்களிலும் சிங்கள இனவாத படைகளாலும், சிங்களக் காடையர்களாலும் அப்பாவித் தமிழ் உறவுகள், எமது சகோதரங்கள், பச்சிளங்குழந்தைகள் வெட்டியும், உயிருடன் எரித்தும் படு கொலை செய்யப்பட்டு வருகின்ற மனிதாபிமானமற்ற செயல் விரிந்து வருகின்றது. சிங்களக் கொலைகார அரசினாலும், அதன் ஏவலர்களாலும் தேச விடுதலைப் பற்றாளர்கள், கல்வியாளர்கள், சிந்தனையாளர்கள், இளைஞர்கள், யுவதிகள் தொடர்ந்தும் இடை விடாது படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். 1958, 1983 ஆம் ஆண்டில் துயரம் மிகுந்த சோக நினைவுகள் தமிழ் மக்களின் சுவாசங்களை வருடி வருகின்றது.

தமிழ் மக்களை அடக்கி எமது சுதந்திர தாகத்தையும், அதன் பற்றுறுதியையும் தடம்புரளச் செய்துவிடலாம் என இனவாதப்படைகள் சிந்திக்கத் தொடங்கியுள்ளன. இதன் தொடர்ச்சியாக அது தன் கொலை வெறித்தனத்தின் தமிழ் மக்களை. உயிருடன் பிணமாக்கும் நடவடிக்கையை வடக்கிலும், கிழக்கிலும் வீச்சாக்கி உள்ளது.

இன்று திருகோணமலையில் கொலை வெறியாட்டம் ஆடும் சிங்கள அரசு நாளை யாழ்.மண்ணிலும் தனது கூலிப் படைகளைக் கொண்டு பெரும் படு கொலைகளைச் செய்யத் திட்டமிட்டுள்ளது. நாம் எமது மண்ணில் உரிமைகளோடு சுதந்திரமாக வாழ வேண்டுமெனின், ஒவ்வொரு இளைஞனும், யுவதியும் ஆயுதமேந்திப் போராடும் இறுதி நிலைக்கு வர வேண்டிய வரலாற்றுக் கடமை எமக்கு ஏற்பட்டுள்ளது.

மிகப்பெரிய இன அழிப்பிலிருந்து எமது இனத்தையும், மொழியையும் பாதுகாக்கவும், எமது மண்ணை மீட்கவும் இளைஞர், யுவதிகளாகிய நாம் அணி அணியாக எமது விடுதலைப் போரில் இணைவோம்.

நீங்கள் ஏந்தப்போகும் ஆயுதமே உங்களது உயிர்களையும், தமிழ் மக்களையும் பாதுகாக்கும் என்பதை மறந்து விடாதீர்கள். எதிரியானவன் தமிழீழ மண்ணிலுள்ள இளைஞர், யுவதிகளை அழிக்கத் திட்டம் வகுத்து அதனை செயற்படுத்தி வருகின்றான். இந்தப் பெரும் ஆபத்தை அறியாமல், உணராமல் நீங்கள் இருப்பீர்களானால் பெறுமதிமிக்க உங்கள் உயிர்கள் மலிவாக இனவாத அரச படைகளால் பலி எடுக்கப்படும் என்பதை மறந்து விடாதீர்கள்.

நீங்கள் தாமதிக் கும் ஒவ்வொரு நிமிடமும் சிங்கள இனவாத அரசின் கொடுங்கரங்கள் தமிழர் தாயகத்தில் கொலை முயற் சிகளைத் தொடரவே செய்யும். எனவே காலத்தின் தேவை அறிந்து, தேசத்தின் இக்கட்டான சூழ்நிலையை உணர்ந்து ஒவ்வொரு தமிழ் இளைஞனும், யுவதியும் எமது தாயகம் மீட்கும் இறுதி விடுதலைப் போரில் அர்ப்பணிப்புடன் இணையுமாறு வேண்டுகின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதுவருடப் பிறப்பை முன்னிட்டு கோப்பாயில் விளையாட்டுப் போட்டி

கோப்பாய் —

கோப்பாய் விளையாட்டுக்கழகமும், கோப்பாய் வடக்கு சனசமூக நிலையமும் இணைந்து சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்தும் விளையாட்டுப் போட்டி கோப்பாய் கந்தசுவாமி கோவிலடியில் இன்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

செ.தவேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட உதவிப்பதிவாளர் து.பிரபாகரன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் விளையாட்டுக்கழகத்தின் முன்னாள் செயலாளர் ரி.வரதராஜன், விளை யாட்டுக் கழக முன்னாள் உறுப்பினர் எஸ். முத்துக் குமாரசுவாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும்,

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய அதி பர் எஸ்.ஞானசம்பந்தன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சதுரங்க சுற்று போட்டி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் —

மெற்றோ பொலிற்ரன், நெவகலா நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் தமிழ் செய்தித் தகவல் மையம் நடத்திய சதுரங்க சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் மெற்றோ பொலிற்ரன் பிரதேச முகாமையாளர் திஸ்ஸ வீரசிங்க பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## புதுவருடக் கொண்டாட்டமும் 'இதுறும் பத்' சீட்டிழுப்பும்!

யாழ்ப்பாணம் —

மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறை கிளை சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வனிதா வாசனா இதுறும் பத் வைப்புச் சான்றிதழுக்கான பரிசில் சீட்டிழுப்பு நிகழ்வு இன்று நண்பகல் 12மணிக்கு மக்கள் வங்கி கிளை முன்பாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையைச் சேர்ந்த திருமதி உமாவரதீஸ்வரன் ஆகியோர் பிரதம விருந்தினராகவும், இமையாணன் அ. த.க பாடசாலை அதிபர் திருமதி ச.நவமணி, தொண்டமானாறு வீரகத்தி மத்திய மகா வித்தியாலய அதிபர் வ.கணேசமூர்த்தி, வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி க.மயிலேறும் பெருமாள், வல்வெட்டித்துறை மக்கள் வங்கியின் ஓய்வுபெற்ற முகாமையாளர் திருமதி.த.கணேசலிங்கம், வல்வை மகளிர் மகா வித்தியாலய அதிபர் கு.நகுலாம்பிகை ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வர்.

## விவசாயத் திணைக்களம் நடத்தும் கண்காட்சியும், நடமாடும் சேவையும்

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்ட விவசாய திணைக்களம் நடத்தும் விவசாய கண்காட்சியும், நடமாடும் சேவையும் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.30 மணிமுதல் மாலை 5 மணி வரை ஆவரங்கால் நடராஜ இராமலிங்க மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்துவைப்பார்.

காணி, விவசாய, கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி அமைச்சின் செயலாளர் எ.ஆர்.எம்.மஹ்ருப், மாகாண விவசாய பணிப்பாளர் கலாநிதி எஸ்.ஞானச்சந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும், மாகாண காணி ஆணையாளர் எஸ். இரவீந்திரன், கால்நடை அபிவிருத்தி மாகாண பணிப்பாளர் டொக்டர் சிவபாலசிங்கம்,

மாகாண நீர்பாசன பணிப்பாளர் எந்திரி சி.சர்வலோகநாதன், விவசாய பீடாதிபதி பேராசிரியர் என்.இராசதுரை, பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், திருமதி சே. விஜயரத்தினம், கமநல சேவை உதவி ஆணையாளர் சுந்தரேசன்,

கோப்பாய் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், தமிழர் பொருண்மிய நிறுவனப் பொறுப்பாளர் செந்தில், வலயக் கல்விப் பணிப்பாளர் வி. ரி.செல்வரட் ணம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்துகொள்வர்.


ராஜா யாழ்ப்பாணம்
புதுவருட வெளியீடு
பரத், மல்லிகா கபூர் மற்றும் பலர் நடித்த
அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
ப.நேரம்:10.30,2.30,6.30,9.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
இன்று முதல்
எஸ்.ஜே.சூர்யா, நயன்தாரா, விவேக் நடித்த
கள்வனின் காதலி
கா.நே:10.30,2.30,6.30,9.30(பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், அசின், பிரகாஸ்ராஜ் மற்றும் பலர் நடித்த
சிவகாசி
இன்று மட்டும் இரவு 8.40 மணிக்கு
ரஜனி, ரேகா நடித்த உழைப்பாளி
கா.நே : (பு.நே) 10.30, 2.15, 5.30

மனோகரா யாழ்ப்பாணம்
இன்று முதல் -
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின
அதிரடி வெளியீடு
திருப்பதி
அஜித்குமார், சதா
மற்றும் பலர் நடித்த
புத்தாண்டு தினத்தை முன்னிட்டு
காலை 7.30 இரவு 12.00 விசேட காட்சிகள்
கா.நே-10.30,2.30,6.30,9.30(பு.நே)
ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்





DAIDO
CF 90C
4 Gear இன் சிறப்புகள்
எங்களிடம் தாராளமாக DAIDO, YAMATO, HONDA, YAMAHA, BAJAJ, SUZUKI மற்றும் எல்லா சீனா தயாரிப்புகளுக்குப் பொருந்தும் உதிரிப்பாகங்கள் வேண்டியளவு கிடைக்கும்






Koyo
ரேசர்கள்
DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO






ஏகமுகவர்
60B,
E.mail: zme@slt.lk


## இதயம் கனிந்து வாழ்த்தி நிற்கின்றோம்

இன்று திருமண வாழ்வில் இணையும் சாய்ந்தமருது அல்–ஹிலால் வித்தியாலய உளவளத்துணை ஆசிரியர் திரு.முகமட் பைசால், கல்முனை அல் – மிஸ்பாஹ் வித்தியாலய ஆசிரியை செல்வி.நஜிமுநிசா தம்பதியினரை இல்லறமெனும் நல்லறச் சோலையில் வள்ளுவனும் , வாசுகியும் போலங்கே தொல்லுலகின் பேறுகள் பெற்று ஈருடலும் ஒருயிரும் போல் சீலம் நிறை இவ்வுலகில் சிறப்புடனே வாழ்கவென வாழ்த்தி நிற்கும் அன்பு நெஞ்சங்களுடன்,

கௌசி, சசி, தேவன், பிலிப்புடனும்
சந்திராவும், பராவும்
இணைந்து கொள்கின்றனர்.

(சி-5253)

# ஜெனிவா பேச்சுக்கு முன்னதாக கடலில் பயணம் மேற்கொள்ளப்படும்



## மட்டக்களப்பு அரசியற்துறைப் பொறுப்பாளர் தயாமோகன்

கொழும்பு—

எதிர்வரும் 19 ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெறவுள்ள பேச்சுக்களுக்கு முன்னர் தென் தமிழீழத்திலிருந்து விடுதலைப் புலிகள் தமது கடற்கலங்களில கிளிநொச்சிக்கான பயணத்தை மேற்கொள்வர் என - மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்தார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கே அவர் இவ்வாறு தெரிவித்ததார்.

எமது கடற்பரப்பில் எமது கடற்கலங்களில் விரைவில் கிளிநொச்சிக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால், விடுதலைப் புலிகள் தமது கடற்பயணம் தொடர்பாக தமக்கு எவ்வித தகவலையும் தெரிவிக்கவில்லையென போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒல்ப்டோட்டியர் தெரிவித்தார்.

இத்தகைய பயணம் மேற்கொள்ளப்படும் நிலையில் கடற்பிரதேசத்தில் தீவிர கண்காணிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜெனிவா பேச்சுக்கு முன்னர் தமது கிழக்கு மாகாண தளபதிகளுடன் கலந்துரையாடுவதற்குப் போக்குவரத்து வசதி செய்துகொடுப்பதற்கு அரசாங்கம் மறுப்புத் தெரிவித்ததுடன், தமது கடற்படைப் படகுகளில் கண்காணிப்புக் குழுவினரின் வழித்துணையுடன் விடுதலைப் புலிகள் பயணத்தை மேற்கொள்ளலாமென அரசாங்கம் தெரிவித்திருந்தது.

ஆனால், அரசின் இந்த அறிவிப்பை நிராகரித்த விடுதலைப் புலிகள் தங்களது படகுகளில் தமது சுய பாதுகாப்புடன் கடற்பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடற்படையின் கண்காணிப்பு கிழக்கு கடலில் அதிகரிப்பு!

திருகோணமலை—

திருகோணமலை புல்மோட்டைக் கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தொடக்கம் கடற்படையினரின் சுமார் 20 டோறா படகுகள் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

இதனைத்தவிர குச்சவெளி மற்றும் இறக்கக்கண்டி கடற்பகுதிகளிலும் கடற்படையினர் கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண தளபதிகள் வன்னிப் பயணத்தை எந்த வேளையிலும் ஆரம்பிக்கலாம் எனத்தெரிவித்துள்ள நிலையில், கடற்புலிகளின் போக்குவரத்துக்களைக் கட்டுப்படுத்தும் வகையிலேயே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஜெனிவா பேச்சுக்கு பின் 20 படையினர் பலியாம்!

## இராணுவப் பேச்சாளர்



கொழும்பு—

அரசு - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஜெனிவாவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர் 20 படையினர் உயிரிழந்ததுடன், 8 கடற்படையினர் காணாமற்போயுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித் தார்.

அரசாங்கத் தகவல் திணைக் களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட் டிலேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

ஜெனிவா பேச்சுவார்த்தையின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் ஐந்து தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதன் காரணமாக படைத்தரப்பினர் 20 பேர் வரை பலியாகி, 9 கடற்படையினர் காயமடைந்தனர். அத்துடன் 8 கடற்படையினர் காணாமற்போயுள்ளனர். விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் யுத்த நிறுத்த உடன் பாட்டை மீறும் செயலாகும் என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

# படகுகளில் பயணம்செய்யும் உரிமை விடுதலைப் புலிகளுக்கு இல்லையாம்!

## அரச சமாதான செயலகப் பணிப்பாளர்

கொழும்பு—

விடுதலைப் புலிகள் தங்களது படகுகளைப் பயன்படுத்தி பயணத்தை மேற்கொள்ள எவ்வித உரியையும் இல்லையென, சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொகென்ன தெரிவித்தார்.

ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அளித்த நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்மூலம் அரசைப் பணியவைக்க முடியாது. ஆனால் பதில் நடவடிக்கைக்கு முன்னதாகப் பொறுமை காக்கத்தான்முடியும்.

அண்மைய தாக்குதல்கள்மூலம் இராணுவத்தை விடுதலைப் புலிகள் சீண்டுகின்றனர். இத்தகைய தாக்குதல்களால் எமக்கு அப்படியான பாதிப்பு இல்லை.

இறப்பரைக் குறிப்பிட்ட தூரத்துக்கு இழுக்கலாம். அதற்குமேல் முடியாது. ஜெனிவா பேச்சுக்கள் நடைபெறும் என்ற நம்பிக்கை உள்ளது. நாங்கள் ஜெனிவாவுக்குச் செல்லத் தயாராக உள்ளோம். அது ஒரு முன்னுதாரணமாக இருக்கும்.

கிழக்குப் பிரதேச புலிகளின் பயணம் தொடர்பாக சில செயற்பாடுகளை அவர்கள் மேற்கொள்கின்றனர். ஆனால், அரசாங்கம் அதை அவ்வளவு எளிதாக ஏற்றுக்கொள்ளாது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின்கீழ் விடுதலைப் புலிகள் தங்களின் சொந்தப் படகுகளைப் பயன்படுத்தும் உரிமை வழங்கப்படவில்லை.

விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்திக்க விருப்பமாகவே உள்ளேன். ஆனால், வன்முறைகளைக் கைவிட்டால்தான் இது சாத்தியம். விடுதலைப் புலிகளால் அரசியல் மைய நீரோட்டத்துக்குள் நுழைய முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. ஆனால், அவர்களது தற்போதைய செயற்பாடுகள் வருத்தமளிக்கின்றன.

கௌரவமான அமைதியை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் இல்லாமல் இத்தகைய தாக்குதல்கள் மூலம் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கலாம் என்று கருதினால் அவர்கள் ஏமாந்துவிடுவார்கள். அமைதி முயற்சிகளில் தீவிரமான அர்ப்பணிப்புடன் எமது தரப்பு உள்ளது. அதைவிட வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை எனத் தெரிவித்தார்.

# சுயாதீனக் குழு நியமன சர்ச்சை; நீதிமன்றை தலையிடக்கோரி மனு

கொழும்பு—

சுயாதீனக் குழுக்களின் நியமனச் சர்ச்சையில் உயர் நீதிமன்றம் தலையிட வேண்டுமெனக் கோரி ஜாதிக ஹெல உறுமய வழக்கு தொடர முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அறிவிப்பில் எதுவித குறையும் இருப்பதாகத் தெரியவில்லை. இதனைத் தற்காலிக நடவடிக்கையாகக் கொண்டு அரசியல் யாப்பு சபையை உருவாக்க ஜனாதிபதி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிச் செயலாளர் உதய கம்மன்பில்ல கருத்து வெளியிட்டுள்ளார்.

இது விடயத்தில் நீதிமன்றம் தலையிடக்கோரி உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அரசியல் யாப்புக்கு எதிராக சுயாதீன ஆணைக்குழு நியமனங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

அரசியல் யாப்பு சபையின் தலைவரான சபாநாயகர் லொக்கு பண்டாரவிடம் இது தொடர்பில் தாம் முறையிடவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்த நியமனம் தொடர்பாக ஜே.வி. பி எதுவித கருத்தும் தெரிவிக்காத போக்கை கடைப்பிடித்து வருகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயற்பாடு முழுமையாக தவறானது. சுயாதீனக் குழுக்களது உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம் அரசியல் யாப்பு சபைக்கு மட்டுமே உள்ளதென ஐக்கிய தேசியக் கட்சியின் கொறடா ஜோசப் மைக்கேல் பெரேரா கூறியுள்ளார்.

மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் நிர்வாக இயக்குநர் பாக்கியசோதி சரவணமுத்து கூறுகையில் - அரசியல் யாப்பின் 17 ஆவது திருத் த்தை இத்தகைய முறையில் பயன்படுத்துவது முறையற்றது எனத் தெரிவித்தார்.

# சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜீவன் சக்தி சுயதொழில் கடன்திட்டம்!

கொழும்பு—

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு தமது தொழில்களை இழந்தவர்களுக்கும், குடும்பத் தலைவர்களை இழந்தவர்களுக்கும் புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டம், இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து ஜீவன் சக்தி எனும் சுய தொழில் கடன் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி, சனச வங்கி, றுகுணு அபிவிருத்தி வங்கி என்பவற்றுக்கூடாக வழங்கப்படும் இந்தக் கடன் திட்டத்துக்கென ஐ.நா.அபிவிருத்தித் திட்டம் 101 மில்லியன் ரூபாவை மத்திய வங்கிக்கு வழங்கியுள்ளது.

வருடாந்தம் 8 வீத வட்டியில் 5 ஆயிரம் ரூபாவிலிருந்து 50 ஆயிரம் ரூபாவரை பாதிக்கப்பட்ட ஒருவருக்கு கடன் வழங்கப்படும். இது தொடர்பான மேலதிக விபரங்களை மத்திய வங்கியின் பிரதான நிலையங்கள், மாவட்டங்களில் இயங்கும் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அலுவலகங்கள் என்பவற்றில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரலுக்கு இராணுவ பாதுகாப்பு நீக்கம்!

கொழும்பு—

இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற சர்ச்சைக்குரிய மேஜர் ஜெனரல் வஜிர விஜயகுணவர்த்தனவின் பாதுகாப்பை விலக்கிக் கொள்ள இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சரத் பொன்சேகா உத்தர விட்டுள்ளார்.

இராணுவத்திலிருந்து கடந்த திங்கட்கிழமை மேஜர் ஜெனரல் வஜிர விஜயகுணவர்த்தன ஓய்வுபெற்றார். அவரின் ஓய்வுக்குப்பின் அவருக்கு வாகனமும், மூன்று படையினரும் பாதுகாப்புக்கு வழங்கப்படுமென என்று இராணுவ தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா முன்னர் உறுதியளித்திருந்தார்.

இருப்பினும் அவரது பாதுகாப்பு வாகனம் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாகவும், மூன்று படையினரும் அடுத்த மாதத்திலிருந்து விலக்கிக் கொள்ளப்படுவர் எனவும் கடந்த திங்கட்கிழமை மேஜர் ஜெனரல் வஜிர குணவர்த்தனவுக்கு, லெப். ஜெனரல் சரத் பொன்சேகா கடிதம் அனுப்பியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் வஜிர விஜயகுணவர்த்தன கடமையாற்றியபோது விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்துகின்ற நடவடிக்கைகளை மேற்கொண்டவர் என்ற குற்றச்சாட்டுக்குள்ளாகியுள்ள நிலையில் இராணுவத் தளபதி அவருக்கான பாதுகாப்பை விலக்கிக்கொண்டதையடுத்து அவர் அதிர்ச்சியடைந்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

# புலிகளின் திட்டமிடல் செயலகம் திருகோணமலையில் திறப்பு!

திருகோணமலை—

திருகோணமலை மூதூர் - சேனையூரில் விடுதலைப் புலிகளின் மாவட்டத் திட்டமிடல் செயலகம் நேற்று முன்தினம் மாலை திறந்து வைக்கப்பட்டது.

செயலகக் கட்டடத்தின் நாடாவை வெட்டி திருமலை மாவட்ட சிறப்பு தளபதி கேணல் சொர்ணம் திட்டமிடல் செயலகத்தை திறந்து வைத்தார்.


செயலகப் பெயர்ப் பலகையை திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்தத் திறப்புவிழா நிகழ்வுக்கு திருமலை மாவட்ட தமிழீழ மாணவர் பேரவையின் தலைவர் புரட்சி தலைமை வகித்தார். தமிழீழ தேசியக் கொடியை திருமலை மாவட்ட காவல்துறைப் பொறுப்பாளர் வின்செட் ஏற்றினார். சிவஸ்ரீ சிவனேசக் குருக்கள் ஈகச் சுடரேற்றினார். நிகழ்வில் எழிலன் மற்றும் திட்டமிடல் செயலக இயக்குநர் ஜேசுதாசன் ஆகியோர் உரையாற்றினர்.

தேசத்தின் பொருண்மிய மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி, மக்களின் சமூக கலாச்சார வளர்ச்சி ஆகியவை தான் எமது நோக்கம். யுத்த காலச் சூழல் இருந்தபோதும் இந்த இலக்குகளை அடைய தொடர்ந்து நாம் செயற்படுவோம் என எழிலன் தெரிவித்தார்.

# மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லையாம்!

## என்கிறார் அமைச்சர் ரம்புக்வெல



கொழும்பு—

அரசாங்கம் யுத்தம் ஒன்றை மீண்டும் ஆரம்பிக்கும் எண்ணம் எதனையும் கொண்டிருக்கவில்லை என அமைச்சர் கெகலிய ரம்புக் வெல தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில் -


சமாதானத்தை முன்னெடுக்கும் வகையில் அரசாங்கம் தொடர்ந்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

எனவே அரசாங்கம் யுத்தம் ஒன்றை முன்னெடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் எண்ணம் எதனையும் கொண்டிருக்கவில்லை.

ஜெனிவா பேச்சுவார்த்தையில் இணங்கிக்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளை தமிழீழ விடுதலைப் புலிகள் மீறியுள்ளபோதும் அரசாங்கம் சமாதானத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.


# திருகோணமலை இனக்கலவர கோரங்கள்...






















# மேற்கத்தைய கலாசாரத்திலிருந்து மக்கள் எவரும் மீள முடியாதுள்ளனர்

## முன்னாள் அரச அதிபர் செ.பத்மநாதன்

தெல்லிப்பளை —

மேற்கத்தைய கலாசாரத்திலிருந்து மக்கள் மீள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக. வட-கிழக்கு மாகாண வீடமைப்புத்திட்ட பணிப்பாளரும் யாழ். மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபருமான செ.பத்மநாதன் தெரிவித்தார்.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தின் கலை, கலாசார நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது -


கலை - இலக்கிய வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாக இருந்து வந்தது. 1990 தொடக்கம் 1996 ஆம் ஆண்டு வரை யுத்த காலம். அந்தக் காலத்தில் கலை இலக்கியம் குறித்தோ அதன் எதிர்காலம் குறித்தோ சிந்தித்தவர்கள் மிகக் குறைவு. அவற்றுக்கு எதிர்காலத்தில் என்ன நடக்கப்போகின்றதென்பதே சந்தேகமாக இருந்தது.

1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி மற்றும் இதர பகுதிகளை கட்டியெழுப்ப வேண்டிய தேவை இருந்ததால், கலை, இலக்கியம் குறித்து சிந்திக்கக் காலம் இருக்க வில்லை.

தற்போது மேற்கத்தைய கலாசாரத்திலிருந்து மக்கள் மீள முடியாதுள்ளனர். மேற்கத்தைய கலாசாரம் இரண்டு பரிமாணங்களைக் கொண்டது. இதில் முதலாவது மேற்கத்தைய கலாசாரத்துடன் மோதல், பூர்வீக குடிகளாக வாழ்ந்து வருதல். இரண்டாவது - கல்விகற்ற குடும்பம் மேற்கத்தைய கலாசாரத்தை பின்பற்றியமை. இந்த இரண்டாவது காரணத்தால் கலாசார சின்னங்கள் படிப்படியாக அழியத் தொடங்கின.

வெளிநாட்டிலுள்ள எமது உறவுகள் தமிழ் மொழியை கதைத்தாலும் கூட, அந்த நாட்டின் கலாசாரத்தையே பேண வேண்டியுள்ளது. எனவே பாரம்பரிய கலைகளை நாம் வளர்க்க ஆவன செய்ய வேண்டுமென அவர் தெரிவித்தார். (72)

# தவக்கால நற்சிந்தனை



இன்று புனித வெள்ளி. நமது மீட்பராம் யேசுவின் இறப்பை நினைவுகூரும் நாள். நம் வானகத்தந்தை மானிட இனத்தின் மீது கொண்டிருந்த அளவில்லா அன்பை எண்பிக்கும் நாள். பாவம், மரணம், என்ற சாபம் இவைகளின் பிடியிலிருந்து மானிட இனத்தை தம்மகன் யேசுவின் சிலுவை மரணத்தின் வழியாக மீட்டுக்கொண்ட நாள். நம் யேசு நமக்காக இருந்திராவிடில் இந்த மனுக்குலம் முழுவதும் முடிவில்லா வாழ்வை இழந்திருக்கும். மீட்புப் பெற்றிராது. இந்த மனுக்குலம் முழுவதின் பாவங்களுக்குப் பரிகாரப் பலியாகவே யேசுவின் விலைமதிக்க முடியாத அவரது இரத்தம் சிந்தப்பட்டது. அப்படிச் சிந்தப்பட்டிராதிருந்தால் சாவிற்குப் பின் பேரின்ப வாழ்வு உண்டு என்ற உறுதியும், எதிர்நோக்கும் இல்லாதிருந்திருக்கும். எனவே, இன்று மானிட இனம் முழுவதும் தந்தைக்கும், அவரது மகன் யேசுவுக்கும், தூய ஆவிக்கும் உள்ளார்ந்த வகையில் நன்றி செலுத்தும் நாள். தன் பணிவாழ்வைப் பலிவாழ்வாக மாற்றிய நாள் இன்றைய நாளாகும். அன்று விலக்கப்பட்ட மரத்தின் கனியை உண்டதால் மரமே சபிக்கப் பட்டதாக இருந்தது. ஆனால் சபிக்கப்பட்ட மரத்தையே தன் மரணத்தின் மூலம் மீட்பின் அடையாளமாகக் காட்டினார். எனவே அந்தச் சிலுவை என்பது மரணத்தை மட்டும் குறிப்பதல்ல. மாறாக அவரது மகிமையையும் குறிக்கிறது. எனவே இன்று சிலுவைச் சாவடைந்த எம் யேசுவையும் அவரது பாடுகளையும் தியானிப்போம்.

- லோ.தார்சீசியஸ்

# பண்ணையாளர் கிராமம் தெரிவு

உடுவில் —

கால்நடை விவசாய அமைச்சின் பண்ணையாளர் கிராமம் அமைக்கும் செயற்திட்டம் பிரதேச செயலக மட்டத்தில் நடைபெற்று வருகிறது.

வலி.தெற்குப் பிரதேச செயலக பிரிவில் கந்தரோடை கிராமம் பண்ணையாளர் கிராமமாக உடுவில் பகுதி கால்நடை வைத்திய அதிகாரியால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தினமும் 10 லீற்றர் பாலை வழங்கக்கூடியதாகவும், ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது இரண்டு பசுமாடுகள் வளர்க்கப்படும் நிலையில் அந்தக் கிராமம் பண்ணையாளர் கிராமமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. (101)

# நுண்கலை மாணவர்களுக்கான பரீட்சைத் திகதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம் —

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலை வளாக முதலாம், இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் மற்றும் எழுத்துப் பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன் படி மூன்றாம் வருட மாணவர்களுக்கான சித்திர வடிவமைப்பு செயல்முறைப் பரீட்சை 17 ஆம் திகதியும், நடனத்துறையினருக்கான செயல்முறைப் பரீட்சை 20 ஆம் திகதியும், சங்கீதத்துறையினருக்கான செயல்முறைப் பரீட்சை 19 ஆம் திகதியும், எழுத்துப் பரீட்சை அடுத்த மாதம் 15 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இரண்டாம் வருட மாணவர்களுக்கான சித்திரவடிவமைப்புத் துறையினருக்கு 26 ஆம் திகதியும், நடனத்துறையினருக்கு அடுத்த மாதம் 2 ஆம் திகதியும், சங்கீதத்துறையினருக்கு அடுத்த மாதம் 5 ஆம் திகதி செயன்முறைப் பரீட்சையும், எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 18 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

முதலாம் வருட மாணவர்களுக்கான சித்திரவடிவமைப்பு துறையினருக்கு அடுத்த மாதம் 5 ஆம் திகதியும், நடனத்துறையினருக்கு அடுத்த மாதம் 8 ஆம் திகதியும், சங்கீதத்துறையினருக்கு அடுத்த மாதம் 15 ஆம் திகதி செயன்முறைப் பரீட்சையும், எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

அத்துடன் இறுதியாண்டு மாணவர்களுக்கான எழுத்துப் பரீட்சை அடுத்த மாதம் 2 ஆம் திகதியும், நடைபெறுமென பல்கலைக்கழக பரீட்சைகள் உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (110)

# ஓய்வூதிய கணிப்பீட்டை திருத்துவதற்கு தாமதம்

யாழ்ப்பாணம் —

12/2005 இலக்க 26.12.2005 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் ஓய்வூதியங்கள் மீளாய்வு செய்து, 10 வீதம் அதிகரிக்கப்படும் போது குறைக்கப்படாத ஓய்வூதியத்திலிருந்தே கணிக்கப்படவேண்டும். எனினும் வலி.கிழக்குப் பிரதேச செயலகத்தில் குறைக்கப்பட்ட ஓய்வூதியத் தொகையிலிருந்தே 10 வீதம் கணக்கிடப்படுகிறது.

இந்த விடயம் குறித்து வலி. கிழக்கு பிரதேச செயலகக் கணக்காளரிடம் ஜனவரி மாதம் தெரிவிக்கப்பட்ட போது ஒவ்வொருகோவையாக பார்க்க வேண்டியுள்ளதால் தாமதம் ஏற்படுகிறது எனக் கணக்காளர் தெரிவித்தார். எனினும் ஏப்ரல் மாத ஓய்வூதியத்திலும் இந்தக் குறை நிவர்த்தி செய்யப்படவில்லை.

குறைந்த ஓய்வூதியம் பெறுபவர்கள் வாழ்க்கைச் செலவு அதிகரித்து அல்லலுறும்போது இவ்வாறான செயற்பாடுகளால் மேலும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர். எனவே, இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் உடன் கவனமெடுக்க வேண்டுமெனப் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது .(110)

# பிரதேச செயலர் பிரிவுகளில் மத்தியஸ்தர் சபை அமைப்பு

உடுவில் —

நிதி மற்றும் நீதித்துறை மறுசீரமைப்பு அமைச்சு பிரதேச செயலக ரீதியாக மத்தியஸ்தர்கள் சபைகளை ஏற்படுத்தி வருகிறது. 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, 1997 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் பிரகாரம் இந்தச் சபைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மக்களிடையே ஏற்படுகின்ற சிறு சண்டை சச்சரவு, குடும்பப் பிணக்குகளை நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்று தாக்கல் செய்வதால் -ஏற்படும் வீண் பண விரயத்தையும், நேரத்தையும் இந்தச் சபைகள் மூலம் தவிர்க்க முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்துக்கு அமைவாக வலி.தெற்கு பிரதேச செயலர் பிரிவில் இந்தச் சபைக்கான ஆளணி தெரிவு இடம்பெற்று அவர்களுக்கான 5 நாள் முழுநேர பயிற்சிக் கருத்தரங்கு சுன்னாகம் பொது நூலக கேட்போர் கூடத்தில்- ஓய்வுபெற்ற சிறைச்சாலை உதவி அத்தியட்சகர் க.கணேசராஜாவால் நடத்தப்பட்டது.

இந்தக் கருத்தரங்கை வலி.தெற்குப் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் ஆரம்பித்து வைத்தார். மத்தியஸ்தர்சபை ஆணைக்குழுவிலிருந்து இவர்களுக்கான பணிநிலைகள் அறிவிக்கப்பட்டதும் தமது கடமைகளை ஆரம்பிப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (101)

# மாவிலித்துறைமுகத்தை ஆழமாக்க அரசாங்க அதிபரிடம் கோரிக்கை

நெடுந்தீவு —

நெடுந்தீவு மாவிலித்துறை முகப்பகுதி ஆழமாக்கப்பட வேண்டுமென அண்மையில் நெடுந்தீவு வந்திருந்த யாழ்.அரச அதிபரிடம் நெடுந்தீவு மக்கள் சார்பில் போதகர் பி.பன்னீர்ச்செல்வம் கோரிக்கையொன்றை விடுத்துள்ளார்.

சோளகக் காற்று வீசுகின்ற காலங்களில் துறைமுகப் பகுதி நீர் வற்றிய நிலையில் இருப்பதால் ஒரு பாதை மட்டுமே ஓரளவு பாவிக்கக்கூடிய நிலையில் உள்ளது. இதன் காரணமாக பயணிகள் படகுகளது அடிப்பாகங்கள் சேதமடைந்து பாவிக்க முடியாத நிலையை அடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அம்புலன்ஸ் படகு கையளிப்பு வைபவத்துக்கு நெடுந்தீவுக்கு வருகை தந்த யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஷிடமே இந்தக் கோரிக்கை விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (113)

# மனவிருத்தி சிறுவர் பாடசாலை மாடிக்கட்டடம் நாளை திறப்பு



கோண்டாவில் —

கோண்டாவில் கிழக்கு சிவபூமி மனவிருத்தி சிறுவர் பாடசாலையின் புதிய மாடிக்கட்டடத்திறப்பு விழா - நாளை பிற்பகல் 3 மணிக்கு சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இளைப்பாறிய ஆசிரியர் சிவப்பிரகாசபிள்ளை- அங்கயற்கண்ணி தம்பதியினர் பிரதம விருந்தினராகவும், ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டப ஸ்தாபகர் வே.சிவசுந்தரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வின் வரவேற்புரையை சிவபூமி பாடசாலை உபதலைவர் க.சிவாஜி நிகழ்த்த, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் ஆசியுரைகளையும், ஒப்புரவாளர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளை, யாழ். மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி.செல்வரட்ணம் ஆகியோர் வாழ்த்துரையையும், வடக்கு - கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகமும் சிவபூமி பாடசாலை செயலாளருமான சதாசிவஐயர் நன்றியுரையையும் நிகழ்த்தவுள்ளனர். (101-82)

# கொமர்ஷல் வங்கி திறந்திருக்கும்

புதுவருடத்தை முன்னிட்டு கொமர்ஷல் வங்கி வாடிக்கையாளர்களுக்காக இன்று சுபநேரம் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை திறந்திருக் கும்.

கொமர்ஷல் வங்கி சாவகச்சேரி, ஸ்ரான்லி வீதி, சுன்னாகம் ஆகிய கிளைகளில் காலை 9-11 மணி வரை கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆன்மீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம் —

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடத்தப்பட்டு வரும் ஆன்மீக சொற்பொழிவு வரிசையில் - இன்று முற்பகல் 10.30 மணிக்கு கர்வம் அடக்கிய கந்தன் என்னும் விடயம் பற்றி சொல்வேந்தன் பொன். சுகந்தன் ஆன்மீகச் சொற்பொழிவாற்றுவார்.

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## அகவை ஐந்து



பெயர் : ம.சிலக்சிகா
முகவரி : சிறுப்பிட்டி.





கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்





வயாவிளான் மத்திய மகா வித்தியாலய வைரவிழா சிறப்பு நிகழ்வும், இல்ல மெய்வன்மைப் போட்டியும் அண்மையில் நடைபெற்றது. இதில் வைரவிழா சிறப்பு மெய்வன்மைப் போட்டியின் போது வலிகாமம் வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எம்.லோகநாதன் உரையாற்றுவதையும், அருகில் அதிபர் கே.கனகராசா மற்றும் விருந்தினர்களையும் படங்களில் காணலாம். (82)

# நினைவுச் சுவடுகள் வெளியீடு

யாழ்ப்பாணம் —

கவிஞர் சோ.பத்மநாதனின் நினைவுச் சுவடுகள் கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்- நினைவுச் சுவடுகள் கவிதைத் தொகுப்பின் வெளியீட்டுரையை பேராசிரியர் சிவலிங்கராஜா, ஆய்வுரையை கோகிலா மகேந்திரன், பா.அகிலன் ஆகியோர் நிகழ்த்தினர். நூலின் முதற்பிரதியை வர்த் தக வங்கி முகாமையாளர் சரவணபவன் ரவீந்திரன் பெற்றுக்கொண்டார்.

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

## அளவையியலும் விஞ்ஞானமுறையும் I

உட்கிடை: ⟶ இணைப்பு: $\wedge$ உறழ்வு: V இரட்டை நிபந்தனை: ⟷
(பரீட்சார்த்திகள் இவற்றைத்தவிர பிற மாறிலிகளை பயன்படுத்தலாகாது)

### பகுதி I

01) அ) எடுப்பு முரண்பாட்டுச் சதுரத்தை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றுக்கு விடை தருக.
- (i) A எடுப்பு உண்மை எனின் என்ன முரண்பாடுகளில் பொய் பெறுமதி பெறப்படும்?
- (ii) E எடுப்பு பொய்யாயின் என்ன தொடர்களில் சந்தேகப் பெறுமதி பெறப்படும்?
- (iii) E எடுப்பு உண்மையாகும்போது என்ன முரண்பாடுகளில் உண்மைப் பெறுமதி காணப்படும்?

(ஒவ்வொன்றிற்கும் 1 புள்ளி)

ஆ) பின்வரும் எடுப்பு முரண்பாட்டு அனுமானங்கள் சரியானதா? பிழையானதா? எனக்கூறுக.
- (i) சில மலர்கள் அழகானவை என்பது பொய் எந்த மலர்களும் அழகானவை என்பது உண்மையாகும்.
- (ii) மறுதலை, உபமறுதலை ஆகிய இரண்டும் அளவில் ஒன்றுபட்டனவாகும்.
- (iii) I எடுப்பு உண்மையாகவிருக்கும்போது அதன் எதிர்மறையின் மறுதலை பொய்யாகும்.
- (iv) எல்லா ஆசிரியர்களும் அறிவுள்ளவர்கள். அறிவுள்ளவர்கள் ஆசிரியர்கள் அல்ல
- (v) நடிகர்கள் எல்லோரும் அழகானவர்கள். ஆகவே அழகானவர்கள் சிலர் பெண்கள் ஆவர்.

(10 புள்ளி)

இ) எடுப்பு முரண்பாட்டுத் தொடர்புகளை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் இடை வெளிகளை நிரப்புக.
- (i) எல்லா கிளிகளும் பச்சையானது என்பது உண்மை எனின் ............................ என்பது ............................ ஆகும்.
- (ii) ............................ என்பது பொய் எனின் எந்த குதிரைகளும் அழகானது அல்ல என்பது பொய்.
- (iii) சில தங்கம் பெறுமதியானது அல்ல என்பது உண்மை எனின் .............. என்பது பொய்யாகும்.

(ஒவ்வொன்றிற்கும் 1 புள்ளி)

ஈ) பின்வருவனவற்றை உதாரணத்துடன் விளக்குக.
- (i) முரண்பாட்டுச்சதுரத்தின் தற்கால விளக்கம்
- (ii) வழிப்படுத்தி (4 புள்ளிகள்)

02) (அ)
- (i) மறுமாற்று எதிர்வைக்கை என்றால் என்ன என்பதனை விளக்கி நிறைமறை எடுப்பிற்குரிய மறுமாற்ற எதிர்வைக்கையினை உதாரணத்துடன் காட்டுக.
- (ii) குறைமறை எடுப்பிற்கு ஏன் மறுமாற்ற நேர்மாற்றம் செய்ய முடியாது எனக்கூறுக.

(4 புள்ளிகள்)

ஆ)
- (i) எல்லா மான்களும் கொம்புடையன எனும் எடுப்பின் எதிர்வைக்கை என்ன?
- (ii) எதிர்மாற்ற விதிகளை உதாரணத்துடன் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

இ) வழிப்பெறுகை விதிகளின் மூலம் பின்வருவன வலிதா? வலிதற்றதா? எனக்கூறுக.
- (i) மிருகங்கள் எல்லாம் கொடியன. ஆகவே கொடியன அல்லாதன எவையும் மிருகங்கள் அல்ல.
- (ii) எந்த உயிர்களுமே இரக்கம் அற்றது. ஆகவே இ க்கம் உள்ள எல்லோரும் உயிர்கள் அல்லாதன அல்ல
- (iii) சில பூக்கள் அழகானவை. ஆகவே பூக்களல்லாதன சில அழகல்லாதன அல்ல.
- (iv) எல்லா மனிதரும் அறிவாளிகள். ஆகவே சில மனிதர் அறிவானவர் அல்ல.

(4 புள்ளிகள்)

ஈ)
- (i) எடுப்பு வெளிப்பேற்றத்திற்கும் அது பற்றிய தற்கால விளக்கத்திற்குமிடையான வேறுபாடுகள் யாவை?
- (ii) A எடுப்பின் மறுமாற்ற நேர்மாற்றம் I ஆகும் விளக்குக.

(8 புள்ளிகள்)

03) அ) நியாயத்தொடையின் பிரதான விதிகளைப் பயன்படுத்தி கீழ்வரும் வாக்கியங்கள் வலிதா? வலிதற்றதா எனப் பரிசீலிக்குக. நியாயத் தொடை வலிதற்றதாயின் மீறிய விதிகளையும், ஏற்பட்ட போலிகளையும் கூறுக.
- (i) சட்டத்தரணிகள் மட்டுமே கருணையுடையவராவார். ஏனெனில் எல்லா வெளிநாட்டவரும் கருணையுடையவரல்ல. எல்லா வெளிநாட்டவர்களும் சட்டத்தரணிகள் ஆவர்.
- (ii) ஆண்கள் அனைவரும் பிடிவாதக்காரர்கள் ஆவார் என்பதோடு பிடிவாதக்காரர் எவரும் உற்சாகமாகவிருப்பதால் உற்சாகமானவர் அனைவரும் ஆண்கள் ஆவர் என்ற முடிவுக்கு வரலாம்.
- (iii) பெண்கள் எல்லோரும் மென்மையானவர்கள் அதே போல் அழகானவர்கள். ஆதலால் மென்மையானவர்கள் அழகானவர்கள்.

(2 x 3= 6 புள்ளிகள்)

ஆ) கீழ்வரும் போலிகளை போலிகளுக்கான உதாரணத்துடன் விளக்குக.
- (i) முக்கூற்று மீறியபோலி
- (ii) பக்கசார்பிலாப்போலி
- (iii) முடிவு மறையில்லாப்போலி
- (iv) பெரும்பதப்போலி (2 x 4= 8 புள்ளிகள்)

இ) நியாயத்தொடையின் 3ம் உருவிற்குரிய ஞாபகச் சொற்களைத்தருக.


(6 புள்ளிகள்)

04) அ) பின்வரும் வாக்கியங்களை சுருக்கத்திட்டத்தின் துணையுடன் வலிதா அல்லவா என வென்வரிப்படம் மூலம் துணிக.
- (i) அமைதியானவர்கள் அழகானவர்கள், விஞ்ஞானிகள் அழகானவர்கள் அரிஸ்டோட்டில் ஒரு அமைதியானவனல்ல ஆனால் அழகானவன் ஆகவே அரிஸ்ரோட்டில் விஞ்ஞானி ஆனால் அழகானவனல்ல.
- (ii) எல்லா ஆண்களும் கொடூரமானவர்கள். கொடூரமானவர்கள் சிலர் முட்டாள்கள் ஆகவே சில ஆண்கள் முட்டாள்கள் ஆவர்.

(4 புள்ளிகள்)

ஆ) கீழே தரப்பட்டுள்ள குறியீடுகளையும் சுருக்கத்திட்டத்தையும் கொண்டு வாதங்கள் அமைத்து வலிதா, அல்லதா என வென் மூலம் துணிக.
A - பெண்கள் வகுப்பு, B - அறிவாளிகள் வகுப்பு x - சுதா
- (i) $AB \neq \varnothing$
  $x \; \varepsilon \; AB$
  $\therefore x \notin B$
  A = பறவைகள் வகுப்பு, B - பறப்பன வகுப்பு, C - நன்றியுள்ள வகுப்பு
- (ii) $AB \neq \varnothing \wedge AB \neq \varnothing$
  $B = \varnothing \longrightarrow AC = \varnothing$
  $\therefore A = \varnothing \longrightarrow AC = \varnothing$ (4 புள்ளிகள்)

இ) தரப்பட்ட சுருக்கத்திட்டம், வென்வரைபினைப் பயன்படுத்தி அவை குறிக்கும் எடுப்புக்களைக் குறித்து அவற்றின் வாய்ப்பினை துணிக.
A - மனிதாபிமானம் உள்ளவர் இருப்பு
B - ஏமாற்றுக்காரர் வகுப்பு
C - இரக்கமுள்ளவர் வகுப்பு $x$ - ஜீவா




(6 புள்ளிகள்)

ஈ) பின்வரும் எண்ணக்கருக்களுக்கு சிறுகுறிப்புத்தருக.
- (i) வகுப்பு இடைவெட்டு
- (ii) முழுமையான வகுப்பிலி

(3 x 2 = 6 புள்ளிகள்)

### பகுதி II

05) அ) பின்வருவனவற்றை குறியீட்டிலமைத்து உண்மை அட்டவணை நேர்முறை மூலம் வலிதா, அல்லதா என துணிக.
- (i) அப்பிள் இனிக்கும் என்பதோடு திராட்சை புளிக்கும். ஆகவே அப்பிள் இனிக்கவும் திராட்சை புளிக்கவுமில்லை.
- (ii) ஒன்றில் இலங்கை உலகக்கோப்பையை வெல்லும் அல்லது இந்தியா உலகக் கோப்பையை வெல்லும். இலங்கை உலகக் கோப்பையை வெல்லும் ஆயினாயினே இந்தியா உலகக் கோப்பையை வெற்றி பெறப் போவதில்லை. ஆகவே இலங்கை உலகக் கோப்பையை வெல்வது உறுதி.

(4 புள்ளிகள்)

ஆ) (NPVNQ) V (R⟶NS) எனும் குறியீட்டு வாக்கியத்தை உண்மை எனக்கொண்டு பின்வருவன உண்மையா? பொய்யா? தீர்மானிக்கமுடியாதா என உண்மை அட்டவணை பயன்படுத்தாது காட்டுக.
- (i) (NP V ND) ⟶ N (R $\wedge$ S)
- (ii) (NQ VP) ⟶ (R⟷ NS)

(3 x 2 = புள்ளிகள்)

இ) கீழ்வரும் குறியீட்டு வாக்கியங்களை சுருக்கத்திட்டத்திற்கு ஏற்ப தமிழில் தருக.
- (i) (NP V Q) ⟶ (SVR)
  P - மழை பெய்தல்
  Q - இடி இடித்தல்
  R - பேரொலி
  S - வானம் கறுத்தல்
- (ii) (P VNQ) ⟶ SV (R $\wedge$ P)
  P - வசி அறிவாளியாயிருத்தல்
  Q - விவேகியாயிருத்தல்
  R - அமைதியானவன்
  S - செந்தமிழ் பேசுவான் (ஒவ்வொன்றிற்கும் 5 புள்ளிகள்)

06) கீழ்வரும் வாதங்களை குறியீட்டிலமைத்து வலிதா என நேரல் முறை மூலம் துணிக.
1) A யும் Bயும் அதிகரிக்குமாயின் C குறையும் ஆகவே A அதிகரிக்குமாயின் C குறையும். அல்லது B அதிகரிக்குமாயின் C குறையும்.
2) கமலா, விமலா என்னும் இருவரில் ஒருவர் மட்டுமே வெளிநாடு செல்வர். கமலா பட்டம் பெறவிரும்பினால் வெளிநாடு செல்ல மாட்டாள். ஒன்றில் கமலா பட்டம் பெறவிரும்புவாள். அல்லது உயர் பதவி பெற விரும்புவாள். ஆகவே விமலா வெளிநாடு செல்வாள் எனின் கமலா உயர்பதவி பெறவிரும்புவாள் என்பதும் வெளிநாடு செல்லமாட்டாள் என்பதும் உண்மை ஆகும்.

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

3) ஒன்றில் பரீட்சை இலகுவானது ஆயின் ஆயினே பரீட்சார்த்திகள் நன்கு சித்தி பெறுவர் அல்லது பரீட்சார்த்தி நன்கு சித்தி பெற்றால் அவர்கள் நன்கு படித்துள்ளார்கள்.

4) அவனும் அவளும் வெளிநாடு சென்றிருந்தால் அப்போது வழிமுறையாகும். (ஒவ்வொன்றிற்கும் 5 புள்ளிகள்)

07) அ) தேற்றத்தின் பயன்பாடுகள் யாவை? (4 புள்ளிகள்)

ஆ) கீழ்வரும் தேற்றங்களைப் பெறுகை முறையினால் நிறுவுக.

(i) $(NP \wedge NQ) \longrightarrow (P \longrightarrow Q)$

(ii) $(P \wedge Q) \longrightarrow (P \longleftrightarrow Q)$

(iii) $(P \vee NP)$

(iv) $(P \longrightarrow P \longrightarrow Q) \longleftrightarrow N(P \wedge NQ)$

(ஒவ்வொன்றிற்கும் 4 புள்ளிகள்)

08) கீழ்வரும் வாதங்களைக் குறியீட்டில் தந்து எடுகூற்றுக்களிலிருந்து முடிவை பெறுதல் மூலம் வலிதினை துணிக.

i) மழை பெய்யுமாயின் நிலம் நனையும் ஆயின் காற்றடிக்கும். நிலம் நனையுமாயின் காற்றடித்தால் இடி இடிக்கும் ஆகவே மழை பெய்யுமாயின் நிலம் நனையுமாயின் இடிஇடிக்கும்.

ii) ரோஜா அழகானது ஆயின் மல்லிகை அழகல்ல ஒன்றில் அல்லி அழகானது ஆகவே ரோஜா அழகானது ஆயின் அல்லி அழகானது ஆயினே மல்லிகை அழகானது.

iii) மனிதர்கள் அறிவாளிகள் என்பதுடன் சுயநலவாதிகள் ஆயின் இரக்கமுள்ளவர் ஆகவே மனிதர்கள் அறிவாளிகள் ஆயின் சுய நலவாதிகள் என்பதுடன் இரக்கமுள்ளவர்கள்.

iv) கல்யாணி அறிவாளியல்ல என்பதுடன் சுஜாத்தா அறிவாளி யல்ல. ஆகவே மணி அறிவாளி அல்ல ஆயின் சுஜாத்தா அறிவாளியல்ல ஆயினே சுமதி அறிவாளியல்ல.

(4x5 = 20 புள்ளிகள்)

## பகுதி III

09) அ) பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்திற்கு சிறுகுறிப்பு வரைக.

i. முன்னோக்கிச் செல்லும் நியாயமாலை.
ii. குறைநியாயத்தொடை
iii. ஐந்து கூறுகள் கொண்ட இந்திய நியாயத்தொடை
iv. ஓயிலரின் படவரைமுறையின் குறைபாடுகள்
v. கருத்துக்குறிப்பும் அகலக்குறிப்பும்
vi. சியாத் வாதம் (4x5 = 20 புள்ளிகள்)

10) அ) பாரம்பரிய போலியையும், பாரம்பரியமற்ற போலியையும் உதாரணத்துடன் வேறுபடுத்திக் காட்டுக. (8 புள்ளி)

ஆ) கீழ்வரும் வாதங்களில் இடம்பெறும் போலிகளை இனங்காண்க.

(i) மொட்டுக்கள், மலரும் எனின் பூக்கும் குணமுடையது. மொட்டுக்கள் மலரவில்லை. எனவே பூக்கும் குணம் உடையதல்ல.

(ii) ஒரு தாவரத்தின் எந்த பகுதியை சோதித்தாலும் அங்கு முத்துக்கள் இல்லையென்பது பெறப்படும். எனவே தாவரத்தில் முத்துக்கள் அல்ல.

(iii) பாலன் பட்டதாரியானவுடன் தான் நேசித்த மாலாவை கைவிட்டு விட்டான். பார்த்தீர்களா பல்கலைக்கழக மாணவர்கள் எவரையும் பெண்கள் நம்பக்கூடாது.

(iv) நாட்டு வைத்தியர் கைபிடித்துப்பார்த்ததே அவர் இறந்ததிற்குக் காரணம். அல்லது அவர் நீண்ட நாட்கள் வாழ்ந்திருப்பார்.

(4x3 = 12 புள்ளிகள்)

11) எவையேனும் நான்கிற்கு சிறுகுறிப்பு வரைக.

i) பல்பெறுமான அளவையியல்
ii) ஒழுக்கவியலும் சட்டவியலும்
iii) பேட்டன்ரசலும் அளவையியலும்
iv) இயற்கை மொழியும் குறியீட்டு மொழியும்
v) இருதலைக்கோள் வாதம்
vi) சதுஸ்கோடி
vii) அளவுசுட்டி (4x5 = 20 புள்ளிகள்)

12) அ)

i) "யாழ்ப்பாணத்தவர் எல்லோரும் பொய் சொல்பவர்கள்" என யாழ்ப்பாணத்தவரான நிமல் கூறினார். நிமல் கூற்றின் உண்மையை ஐயுறுதற்கான காரணம் உள்ளது எனக் கருதுகிறீரா?

ii) அப்பெண்ணைத் திருமணம் செய்தல் மூலம் அவன் ஒரு பைத்தியக்கார செயலை செய்துவிட்டான். பைத்தியக்காரர் அனைவரும் அங்கொடைக்கு அனுப்பப்படவேண்டியவர்கள். ஆகவே அவனும் அனுப்பவேண்டும் என்பதில் ஏற்பட்ட போலி யாது?

iii) இந்த மனிதனுடைய தகப்பன் எனது தகப்பனின் மகன் அந்த மனிதன் யாராகவிருக்கலாம்?

iv) **X** என்பவர் **Y** இன் சகோதரர் ஆவார். எப்போது **A**க்கும் **B**க்குமிடையான முறை சமச்சீர் உடையதாயிருக்கும், எப்போது **A**க்கும் **B**க்குமிடையான தொடர்பு சமச்சீரற்றதாயிருக்கும்.

(4x5 = 20புள்ளிகள்)

க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

# அளவையியலும் விஞ்ஞானமுறையும் II

## பகுதி I

01) அ)

i) எண்சோதிடம், கிரகசோதிடம், அங்கசோதிடம் என்பதனை விஞ்ஞான அல்லாத தன்மையை ஆராய்க. (4 புள்ளிகள்)

ii) விஞ்ஞானம் ஆனது எவ்வளவு புலக்காட்சியில் தங்கியுள்ளது என விளக்குக. (2 புள்ளிகள்)

ஆ) i) தூய பிரயோக விஞ்ஞானங்களைப் பொருளாதார விருத்தியுடன் ஒப்பிடுக.

ii) வடிவ விஞ்ஞானங்களில் இரண்டு துறைகளையும் விடய விஞ்ஞானங்களில் இரண்டையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

இ) i) தற்கால விஞ்ஞான வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு பொப்பரின் பொய்யாக்கற்
தத்துவம் எவ்வளவிற்கு நியாயப்படுத்தக்கூடியது என்பதை ஆராய்க. (4 புள்ளிகள்)

ii) பின்வருவற்றிற்கு சிறுகுறிப்பு தருக.

1. இயற்கை விஞ்ஞானம் சமூக விஞ்ஞானம்
2. உயிரியல் விஞ்ஞானம் பௌதீக விஞ்ஞானம்
3. தூய விஞ்ஞானம் பிரயோக விஞ்ஞானம்
4. நேர்நிலை விஞ்ஞானம் பெறுமான விஞ்ஞானம்

(6 புள்ளிகள்)

02)

அ) உளவியல் இயற்கை விஞ்ஞானத்துக்குரிய பண்புகளையும், சமூக விஞ்ஞானத்துக்குரிய பண்புகளையும் வெவ்வேறாக விளக்குக. (5 புள்ளிகள்)

ஆ) கருதுகோளைக் கட்டமைப்பதும் அதனைப் பரிசோதிப்பதும் விஞ்ஞான ஆராய்ச்சிகளின் அடிப்படையாகும் ஆராய்க. (6 புள்ளிகள்)

இ) விஞ்ஞானத்தில் எந்த ஒரு முடிவு தரு சோதனையின் போதும் பெறபபடும் முடிவானது இறுதியான முடிவு என்பது சந்தேகமானதே என்பதற்கு விஞ்ஞானத்தில் ஒரு உதாரணம் தந்து இக்கருத்தை விளக்குக. (5 புள்ளிகள்)

ஈ) இயற்கை விஞ்ஞானத்தின் வளர்ச்சி உபகரணங்களின் வளர்ச்சியில் எவ்வாறு தங்கியுள்ளது என உதாரணத்துடன் விளக்குக. (4 புள்ளிகள்)

03) பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்திற்கு சிறுகுறிப்பு வரைக.

i) விஞ்ஞானத்தில் ஒப்புமை மாதிரிகளின் பங்கு
ii) சமூக விஞ்ஞானத்தில் புறவயம்
iii) தற்கால விஞ்ஞானத்தில் நிர்ணயமில் வாதம்
iv) விஞ்ஞானத்தில் இயல் திட்ட வாதம்
v) தற்சார்புடைய எதிர்வு கூறல்
vi) பரிணாம வாதக்கோட்பாடு
vii) விஞ்ஞான முன்னேற்றத்தில் தொழில்நுட்பம்

04)

அ) "ஒரு தோற்றப்பாடு நிகழும்போது அங்கில்லாத நிபந்தனைகள் எதுவும் அத்தோற்றப் பாட்டிற்குரிய காரணமானது" எனும் அடிப்படைத் தன்மையினைக் கொண்ட

i) ஜோன் ஸ்குவாட் மில்லின் பரிசோதனைமுறை என்ன? வரைவிலக்கணம் கூறுக.

ii) அம்முறைக்குரிய விஞ்ஞான வரலாற்றில் ஓர் உதாரணம் தருக. (4 புள்ளிகள்)

ஆ) i) அவதானித்த எல்லா மாணவர்களும் திறமைசாலிகள் ஆகவே எல்லா மாணவர்களும் திறமைசாலிகள்.

ii) கொலை நடைபெற்ற இடத்தில் சூசை காணப்பட்டுள்ளான். ஆகவே கொலையில் சூசைக்கு சம்பந்தமுண்டு.

மேலே தரப்பட்டிருப்பன தொகுத்தறி வாதமாகும். தொகுத்தறி வாதத்தின் பிரதான பண்புகள் வெளிப்படும் வகையில் அவற்றைப் பரிசீலிக்குக. அத்துடன் வாதம் (i) வாதம் (ii) என்பவற்றுக்கிடையில் காணப்படும் வேறுபாடுகளைத் தருக. (4 புள்ளிகள்)

இ) i) சமூக விஞ்ஞானத்தில் ஒருவரால் எதிர்வு கூறப்பட்ட விடயம் நடைபெறாது போகும் சந்தர்ப்பத்தை உதாரணத்துடன் விளக்குக. (4 புள்ளிகள்)

ii) இயற்கைப் பரிசோதனை என்றால் என்ன என்பதை விளக்குக. (3 புள்ளிகள்)

ஈ) i) பரிசோதனையிலும் பார்க்க அவதானம் மூலம் தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் போது ஏற்படும் தவறுகள் எவை? (2 புள்ளிகள்)

ii) பின்வருவனவற்றை வேறுபடுத்துக.
a) நேர்ச்சோதனை நேரல் சோதனை
b) கருதுகோளின் எளிமையும் பொதுமையாக்கலும்

(3 புள்ளிகள்)

## பகுதி II

அ) i) அளவறிதலே விஞ்ஞான முறையின் பண்பாகும் ஆராய்க. (5 புள்ளிகள்)

ii) பின்வருவனவற்றை விளக்குக.
a) எல்லா அளவீடுகளும் அண்ணளவானதே.
b) அளவீடும் சமூக விஞ்ஞானமும் (4 புள்ளிகள்)

ஆ) i) அளவீட்டின் மூலமே விஞ்ஞான விளக்கம் உறுதி பெறுகின்றன. உதாரணம் மூலம் விளக்குக.

ii) பங்குபற்றல் அவதானத்தின் சாதக பாதகங்களை விளக்குக. (3 புள்ளிகள்)

இ) i) விஞ்ஞானத்தில் கருதுகோள் உய்த்தறி வடிவம், விதி உய்த்தறி வடிவம் என்பவற்றின் முக்கியத்துவத்தைக் கூறியவர் காள் ஹெம்பல் ஆவார் விளக்குக. (3 புள்ளிகள்)

ii) விஞ்ஞானத்தில் அறுதிச்சோதனையின்போது கருவிகள் பயன் படுத்திய சந்தர்ப்பத்தை உதாரணம் தந்து விளக்குக. (3 புள்ளிகள்)

06) அ) i) நிகழ்தகவு பற்றி நவீன விளக்கம் மற்றும் கெயின்ஸ், டேவிற் ஹியூம் என்பவர்களது கருத்துக்களையும் முன்வைக்குக. (3 புள்ளிகள்)

ii) விஞ்ஞான விளக்கத்தில் நிகழ்தகவின் பங்களிப்புப் பற்றி சிறு குறிப்புக்கள் தருக. (3 புள்ளிகள்)

iii) நிகழ்தகவும், தொகுத்தறிப் பொதுமையாக்கமும் விளக்குக. (4 புள்ளிகள்)

ஆ) i) ஒரு நிகழ்வில் நிகழ்தகவு என்றால் என்ன விளக்குக. (3 புள்ளிகள்)

ii) நிகழ்தகவின் மாதிரி வெளி என்றால் என்ன? (2 புள்ளிகள்)

இ) i) ஒரு தாயக்கட்டை ஒன்று பச்சையாக, மஞ்சளாக, சிவப்பாக இருப்பதற்கு நிகழ்தகவு முறையே $^1/_4$, $^1/_2$, $^1/_8$ ஆகும். இவை தாயமாக இருப்பதற்கு முறையே **10%, 20%, 30%** எனின் பச்சை அல்லது மஞ்சள் அல்லது சிவப்பு தாயக்கட்டை தான் தாயமாக இருக்கலாம் எனின் சதுரமுகி ஒன்று தாயமாக இருப்பதற்கு நிகழ்தகவு யாது? (3 புள்ளிகள்)

ii) இரு தாயக்கட்டைகள் இருமுறை உருட்டப்படுகிறது. மொத்தம் 24 புள்ளிகள் வருவதற்கான நிகழ்தகவு யாது? (2 புள்ளிகள்)

ஆசிரியர் -
S.R.J. சுதன் (புனித தெரேசா மகளிர் கல்லூரி).

# மன்னார் வாழ்வோதய நிறுவனத்தினால் 25 வீடுகளுக்கு அடிக்கல்நாட்டுவிழா

மன்னார்

மன்னார் மமுவராயர் கட்டைய டம்பன் பிரதேசத்தில் மன்னார் வாழ் வோதய நிறுவனத்தால் நிரந்தர வீட்டுத்திட்டத்துக்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் நடைபெற்றது.

வாழ்வோதய நிறுவன இயக்குநர் அருட்தந்தை பி.ஜேசுராஜா அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ் வில் - மன்னார் ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகை கருத்துத் தெரி விக்கையில் -

எமது நாடு இன்று என்றுமில்லாத வாறு பல பிரிவினைகள் மத்தியில் இருக்கிறது. இந்த நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் திடீர் என இரத்த களரியும், அநீதியான செயல்களுமே நடைபெற்று வருகின்றன.

நாம் இதனை ஒரு போதும் ஏற்க முடியாது. நாம் அனைவரும் ஒன்று பட்டு இதனை வேரோடு அழிப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அத்தோடு நோன்பு இருந்து இறைவனிடம் செபிக்க வேண்டும். அப்போதுதான் நாம் எதிர்பார்க்கின்ற நிலையான சமாதானம் எமது நாட்டில் மலரும்.

இந்த வீட்டுத்திட்டம் மக்களின் நன்மை கருதி இந்தப் பிரதேசத் துக்குக் கிடைத்துள்ளது. இந்தக் கிரா மம் புதுப்பொலிவுடன் விளங்க வேண் டும் என்றால் மக்களின் பங்களிப்புத் தான் மிக முக்கியமாக இருக்கிறது. இந்தத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியுதவியும், மக்களின் பரந்துபட்ட பங்களிப்பும் இருக்கும் என்றால் இன்னும் சிறப்பாக எல்லாவசதிகளை யும் நல்லதொரு இல்லமாக அமை யும். எனவே, அனைவரும் ஒறுமை உணர்வுடன் இந்த வீட்டுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் எனத் தெரி வித்தார்.

இந்த நிகழ்வில் வாழ்வோதய நிறுவன இயக்குநர் அருட்தந்தை பி.ஜேசுராஜா அடிகளார் கருத்துத் தெரிவிக்கையில், இந்தத் திட்டம் நல்ல முறையில் பூர்த்தியாக வேண்டும் என்றால் அனைவரும் தமது பொறு ப்பை உணர்ந்தவர்களாகச் செயற்பட வேண்டும். அனைத்து மக்களின் பூரண ஒத்துழைப்பும் கிடைக்கப் பெறும் பட்சத்தில் எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் இந்த வீட்டுத்திட்டத்தைப் பூர்த்தியாக்கலாம். இந்தக் கிராமத்தில் எமது நிறுவனம் வீட்டுத்திட்டம் மட் டும் நிறைவேற்றப் போவதில்லை. மாறாக பல்பயான மலசலகூடம் மற்றும் ஏனைய அடிப்படைத்தேவை கள் போன்றவற்றையும் நிறை வேற்றி ஓர் சிறந்த மாதிரிக் கிராமமாக உருவாகும். தொடர்ச்சியான பங்க ளிப்பை இந்தப் பிரதேச இளைஞர்கள் கூடுதலாக வழங்கவேண்டும். இந் தத் திட்டம் மட்டுமன்றி, வேறு பல அபிவிருத்தித் திட்டங்களையும் நிறை வேற்றுவதற்கும், இளைஞர்களின் பங்களிப்பு மிக முக்கியமாக இருக்கி றது. அத்தோடு இந்த இளைஞர்க ளின் தொழில் வாய்ப்பை பற்றியும் நாம் கவனம் செலுத்துவோம் எனத் தெரிவித்தார்.

மடு உதவி அரசாங்க அதிபர், கிராம அலுவலர், மாதர் அபி விருத் திச் சங்கத் தலைவி ஆகியோர் உரை களைத் தொடர்ந்து 25 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

## மாபெரும் கண்டனப் பேரணி!

முழங்காவில்

மாமனிதர் விக்னேஸ்வரன் கடந்த செவ்வாய்க்கிழமை படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து முழங்காவிலில் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெற்றது.

முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் ஆரம்பித்த இந்தப் பேரணி முழங்காவில் மாவீரர் கலையரங்க மைதானத்தைச் சென்றடைந்தது.

முழங்காவில் ஆசிரியர் குபேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச்சுடரை முழங்காவில் பிரதேச காப்புப்படைப் பொறுப்பாளர் ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வில் உரையை கரியாலை நாகபடுவான் கிராம அலுவலர், பெண்கள் மேம்பாட்டுமன்றத் தலைவி இந்திராணி, பாடசாலை அதிபர் ஜெயசீலன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து சிங்களப் பேரினவாத அரசுக் கான கண்டன அறிக்கை வாசிக்கப்பட்டது.

## ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் மூன்று வீதிகள் புனரமைக்க நிதி ஒதுக்கீடு!

வடமராட்சி கிழக்கு

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட மூன்று வீதிகள் புனரமைக்கப்பட இருக்கின்றன. ஐரோப்பிய ஒன்றிய நிதிப்பங்களிப்புடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் 6.5 கிலோ மீற்றர் நீளமான வீதிகளை அமைப் பதற்கு 204 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்த நிதி உதவியுடன் 3.05 கிலோமீற்றர் நீளமான வாரிவட்டன் வீதி, 1.07 கிலோமீற்றர் நீளமான செம்பியன்பற்று புனித பிலிப்நேரி யார் வீதி, 1.35 கிலோமீற்றர் நீளமான மாமுனை வீதி என்பன புனரமைக் கப்படவுள்ளன.

இந்த வீதி புனரமைப்பு வேலை கள் யாவும் 2006 எதிர்வரும் யூன் மாதத்துக்கு முன் பூர்த்தி செய்யவுள் ளதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத் தித்திட்ட அலுவலர் தெரிவித்தார். (21)



வன்னேரி குஞ்சுக்குளம் கணேசா வித்தியாலய இல்ல மெய் வல்லுநர் போட்டியில் வைத்திய கலாநிதி எஸ்.முருகானந்தன் விளையாட்டுச் சுடரை ஏற்றுவதைப் படத்தில் காணலாம்.

படம்: கு.கிருஷ்ணா

## வட்டக்கச்சி மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி!

வட்டக்கச்சி

வட்டக்கச்சி மகாவித்தியாலயத் தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி கடந்த சனிக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய அதிபர் சி.கனகசிங்கம் தலைமையில் பாடசாலை மைதா னத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலை மாண விகளின் பாண்ட் வாத்தியத்துடன் பிரதம விருந்தினர்கள் அழைத்து வரப் பட்டனர்.

இந்த நிகழ்வின் மங்கள விள க்கை கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழில் அன்பன், கரைச்சிப்பிரதேச செயலர் க.சுலோஜினி ஆகியோர் ஏற்றி வைத் தனர்.

தமிழீழ தேசியக்கொடியை திரு மாறன் ஏற்றி வைத்தார். பாடசாலைக் கொடியை பாடசாலை அதிபர் சி.கனக சிங்கம் ஏற்றி வைக்க, இல்லங் களுக் கான கொடியை இல்ல பொறுப் பாசிரியர்கள் ஏற்றி வைத்தனர்.

ஒலிம்பிக் தீபம் ஏற்றபட்டதைத் தொடர்ந்து விளையாட்டுப் போட்டி ஆரம்பமானது.

இதில் 336 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தை சங்கிலியன் இல்ல மும், 305 புள்ளிகளைப் பெற்று இரண் டாமிடத்தை குளக்கோட்டன் இல்ல மும், 216 புள்ளிகளைப் பெற்று மூன் றாமிடத்தை பண்டாரவன்னியன் இல் லமும், 192 புள்ளிகளைப் பெற்று நான் காமிடத்தை கைலாய வன்னி யன் இல்லமும், 174 புள்ளிகளைப் பெற்று ஐந்தாமிடத்தை எல்லாளன் இல்ல மும், பெற்றுக்கொண்டன.

இந்த நிகழ் வில் கரைச்சிப் பிர தேச செயலர் க.சுலோஜினி, கிளி நொச்சி கல்வி வலய ஆங்கில பாட ஆலோசகர் தனராஜ், கிளிநொச்சி கல்வி வலய தமிழ்பாட ஆலோசகர் முருகவேல், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரி யர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் கள், பெற்றோர்கள், பழைய மாண வர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (09)

## விசேட கலந்துரையாடல்

புதுக்குடியிருப்பு

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தால் மனித உரிமைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் கடந்த 5 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணிமனையின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - மனித உரிமைகள் தொடர்பான விடயங்களையும், மனித உரிமைச் சட்டங்கள் பற்றியும் வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத் தலைவர் வணபிதா கருணாரட்ணம் அடிகளார், பிரதித் தலைவர், சட்டத்தரணி காசிநாதர் சிவபாலன் கலந்து கொண்டு மிகவும் தெளிவான முறையில் எடுத்துரைத்தனர். (வெ)

## நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத வங்காலை-சிறுநாவற்குளம் வீதி!

மன்னார்

மன்னார் - வங்காலை பிரதேசத்தில் சிறுநாவற்குளம் வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இந்த வீதியில் தினமும் அரச ஊழியர்கள், விவசாயிகள், கடற்தொழிலா ளர்கள் போன்றோர் போக்குவரத்துச் செய்து வருகின்ற நிலையில் 1985 ஆம் ஆண் டுக்குப் பின்னர் இந்த வீதி புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது.

வங்காலை கிராம பொது அமைப்புகள் புனரமைத்துத் தருமாறு சம்பந் துப்பட்டவர்களுக்கு கோரிக்கை விடுத்தபோதிலும் இது வரையில் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என இந்த பிரதேச பொது மக்கள் விச னம் தெரிவித்தனர். (201)

## மீனவர்களின் உடமைகள் நாசம் !

மன்னார்

மன்னார் கடலில் இந்திய மீனவர் களின் அத்துமீறிய மீன்பிடியால் கடந்த மாதம் 20ஆம் திகதி தொடக் கம் 27ஆம் திகதி வரையான நாட்களில் 90இற்கும் மேற்பட்ட மீன வர்களின் தொழில் உடைமைகள் நாசமாக்கப்பட்டுள்ளன்.

இந்தப் பகுதியில் இந்திய மீனவர் களால் வலைகளை வெட்டியும், அபக ரித்தும் செல்வதால் 90 வரையான குடும்பங்களில் ஒரு குடும்பத்தில் 45 ஆயிரம் ரூபா தொடக்கம் 90 ஆயிரம் ரூபா வரையான நட்டத்தை எதிர் நோக்கியுள்ளது.

இது தொடர்பாக மன்னார் மனித நேய ஒன்றியத்தால் கடற்தொழில் அமைச்சிடம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கக்கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (கு)

## பிரதேச செயலகம் அமைப்பு

மன்னார்

மன்னார்-மாந்தை வடக்கு பிரதேசத்தில் புதிய பிரதேச செயலகம் அம்மக்கப்படவுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு என ஐந்து பிரதேச செயலர் பிரிவுகள் உள்ள நிலையில் மாந்தை வடக்கில் புதிய பிரதேச செயலர் பிரிவு உருவாக்கப்படவுள்ளது.

மன்னார் - விடத்தல் தீவுப் பிரதேசத்தில் இந்தப் பிரதேச செயலகக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. (கு)

## ஒளிப்படக் கண்காட்சி

முழங்காவில்

தமிழீழ ஒளிக்கலைப்பிரிவின் ஒளிப்படக் கண்காட்சி கடந்த 8, 9 ஆம் திகதிகளில் முழங்காவில் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் போரியல் வரலாறுகள், தமிழர் வரலாறுகள் உள்ளிட்ட பெரும் தொகையான ஒளிப்படங்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டன. இதைப் பெருமள வான மக்கள் பார்வையிட்டனர். (கு)

## உபகரணங்கள் கையளிப்பு

பூநகரி

பூநகரி பிரதேசத்தில் கடற்தொழி லாளர்களுக்கு தொழிலுக்கான உப கரணங்கள் வழங்கப்பட்டன.

கடல்வள நீரியல் திணைக் களத்தால் இந்த கடற்தொழில் உபகர ணங்கள் வழங்கப்பட்டன.

அண்மையில் பூநகரி கடற் தொழிலாளர் சமாசத் தலைவர் தலைமையில் உபகரணங்கள் கையளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

## இரண்டு ஆலயங்கள் அமைப்பு

மருதங்கேணி

வடமராட்சி கிழக்கு - மருதங் கேணி மருத்துவமனையில் இந்து ஆலயம், கிறிஸ்தவ ஆலயம் ஆகி யன கட்டப்பட்டு வருகின்றன.

இந்த மருத்துவமனையில் ஆரம் பத்திலிருந்து எந்தவொரு ஆலயமும் இல்லாததால் இந்த வருடம் இரண்டு ஆலயங்கள் ஒரே நேரத்தில் கட்டப் பட்டு வருவதாகவும், மருத்துவ மனைக்கு சிகிச்சை பெறவரும் பல நோயாளர்கள் ஆலய தரிசனத்தை மருத்துவமனை வளாகத்திலேயே பெற்றுக்கொள்ளலாம் என மருத்துவ அதிகாரி சின்னத்தம்பி சூரியகுமார் தெரிவித்தார். (கு)

## ஆதாரம் சஞ்சிகை வெளிவந்துள்ளது

வட்டக்கச்சி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதாரம் சஞ்சிகை இதழ் 45 வெளிவந்துள்ளது.

இதில் தேசியத் தலைவரின் சிந்தனை, மண்ணில் தொலைந்த மனது, தேடி கவிதை எஸ்.சுமன் எழுதிய இரணைமடுக்குளம், கி.பி. மரியதாசன் எழுதிய விலங்குகளிலிருந்து மனிதருக்குப் பரவும் நோய்கள், அ.கேதீஸ்வரன் எழுதிய கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயப் பின்னணியும், பொருளாதார அபிவிருத்தியில் அதன் முக்கியத்துவமும், மணிமேகலை குமாரசாமி எழுதிய குப்பைகூழ முகாமைத்துவம் பயிர்ப்பீடைகளின் மறுகிளர்ச்சி அவற்றுடன் சிறுவர்களின் வீட்டுத்தோட்டம் பற்றிய சிறு குறிப்புடனும், நவரட்ணராஜா எழுதிய செயற்கைமுறைச் சினைப்படுத்தலும், கால்நடைவிவசாயி சி.விநாயக மூர்த்தியின் நேர்காணலுடன் இன்னும் பல விடயங்களுடன் வெளிவந் துள்ளது. (09)

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை திறப்பு !

மன்னார்

நிகொட் திட்ட நிதியுதவியுடன் மாந்தை வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஆலங்குளக் கிளை நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் பலநோக்குச் சங்கக் கிளையை அடம்பன் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் றொபேட் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

தொடர்ந்து விற்பனையை சங்கக் கணக்காளர் ஆரம்பித்து வைத்தார்.

இதில் மாந்தை வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமை யாளர், கிளைக்குழுத் தலைவர், கூட்டுறவுப் பகுதி இணைப்பாளர், பணிப்பா ளர்கள் உட்பட்டோர் கலந்துகொண்டனர். (கு)

## நிகொட் திட்டத்தில் மடு கல்விப் பணிமனைக்கு புதிய கட்டடம்!

### மடு வலயக் கல்விப் பணிப்பாளர் ம.தேவேந்திரன் தெரிவிப்பு

மன்னார்

மடு கல்விப் பணிமனைக்குப் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது என மடு வலயக்கல்விப் பணிப்பாளர் ம.தேவேந்திரன் தெரிவித்தார்.

மடுவலய கல்விச் செயற்பாடுகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மடு கல்வி வலயத்தில் உள்ள 41 பாடசாலைகளில் 36 பாடசாலைகள் தற்போது இயங்குகின்றன. பாடசாலைகளில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றாலும் நிறைவான நிலையினை அடையவில்லை.

எமது கல்வி வலயத்துக்குக் கூட நிரந்தரக் கட்டடம் இல்லாத நிலையில் நிகொட் திட்டத்தின் கீழ் ஒன்றரைகோடி செலவில் புதிய கட்டடம் அமைக் கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (கு)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.

- திருக்குறள்

## நமது நோக்கு

# நியாயத்தின் நிரூபணம்!

திருகோணமலை நகரில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரத்தில் பத்துக்கும் மேற்பட்டோர் கோரமாகக் கொல்லப்பட்டு, ஏராளமான கடைகள் வீடுகள் எரித்து அழிக்கப்பட்டு, சூறையாடப்பட்டிருக்கின்றன.

இந்தக் கோரத் தாண்டவத்தில் 50இற்கும் மேற்பட்டோர் படுகாயமுற்றதுடன், நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக் கலவரத்துக்குப் பின்னர் - 1987 இலும், அதற்குப்பின்னர் இப்போதுமாக திருமலை மோசமான இனவன்முறைக்குட்பட்டிருகிறது. தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோணமலையை எப்படியாவது ஆக்கிரமித்து - தமிழர்களை ஒட்டுமொத்தமாக வெளி யேற்றிவிடவேண்டும் என போடப்படும் சதியின் வெளிப்பாடே இது.

மிகவும் கச்சிதமாகத் திட்டமிட்டு மூன்று லொறிகளில் சிங்களக் காடையர்கள் கொண்டு வந்து குவிக்கப்பட்ட பின்னரே - மரக்கறிச்சந்தை குண்டுவெடிப்பு நிகழ்த்தப்பட்டிருக்கிறது. எல்லாமே ஒரு திட்ட ஒழுங்கின்படிதான் நடந்தேறியிருக்கின்றன.

குண்டுவெடிப்பை புலிகள் நிகழ்த்தியதால்தான்- சிங்கள மக்கள் கொதித்தெழுந்து தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபட்டதாகக் காட்டிக்கொள்வது, புலிகள் மீது பழியைப் போடுவது, தமிழர்களை ஒட்டுமொத்தமாக விரட்டியடிப்பது இவைதான் இந்தக் கலவர சூத்திரதாரிகளின் நோக்கம்.

திருமலையில் இனக்கலவரத்தைத் தோற்றுவிக்க அண் மைக்காலத்தில் பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. புத்தர் சிலை விவகாரம் முதல் ஹர்த்தால்கள், போராட்டங்கள் என்று ஜே.வி.பி பின்னணியுடன் பலமுறை இந்த முயற்சிகள் அரச படைகளின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால், அவை வெற்றிபெற முடியாமல் போகவே தமிழ் மக்களை - புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஈடுபட முடியாதவாறு கொன்றழித்து, விரட்டியடிக்க இந்தச் சந்தர்ப்பத்தை சிங்கள பேரினவாதம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

கடற்படை, இராணுவம், பொலிஸ் என அனைவருமே கைகட்டி நின்று பார்த்திருக்கவே - இந்தக் கோரக்கொலைகளும், ஊழித்தாண்டவங்களும் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. இதை ஒரு அரச பயங்கரவாதத்தின் மறுபக்கமாகவே பார்க்கப்படவேண்டும்.

தமிழ் மக்களை எப்படியாவது திருமலை மண்ணிலிருந்து அகற்ற வேண்டும் என்ற தீர்மானத்துக்கு சிங்களப் பேரினவாதிகள் எப்போதோ வந்துவிட்டனர். அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் - திருமலை நகரசபையையும், பிரதேச சபையையும் தமிழரசுக்கட்சி பெருவாரி வாக்குகளுடன் கைப்பற்றியது சிங்களப் பேரினவாதத்துக்கு மூக்குடைபட்டதாகவே முடிந்துவிட்டது.

இதுதான் சிங்களப் பேரினவாத சக்திகளை வெறுப்பேற்றி, கடுப்பேற்றி இந்த நிலைக்குக் கொண்டுவந்து விட்டிருக்கிறது. இதன் விளைவாகவே தமிழ்த் தேசியத்தின் குரலாக திருமலை மண்ணில் இருந்து கர்ஜித்த மாமனிதர் வ.விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டார்.

இப்போது தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு, வெட்டிச்சாய்க்கப்பட்டு, குருதிவழிய வீதிகளில் விரட்டியடிக்கப்பட்டிருக்கின்றனர். திருமலை நகரில் வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறந்த தமிழ் வர்த்தகர்கள் தலையெடுக்க முடியாமல் செய்யப்படிருக்கின்றனர்.

இந்த இனக்கலவரத்தின் விளைவாகத் திருமலை நகர் மீது பரவிய புகைமூட்டத்தின் விளைவு - சாதாரணமானதாக இருக்கப்போவதில்லை. விக்னேஸ்வரனின் படுகொலையுடன்தான் மீளவும் கிளைமோர்கள் வெடிக்கத் தொடங்கின.


அதேவேளை, திருமலை இனப்படுகொலையுடன் சிங்களப் பேரினவாதம் நான்காவது கட்ட ஈழப்போரைத் தொடக்கி வைக்கும் நிலையில் இருப்பதாகவே பரவலாகக் கருத்து நிலவுகிறது. இந்த இனப்படுகொலையே அடுத்த கட்டப் போருக்கான அடித்தளமானாலும் ஆச்சரியமில்லை.

தமிழ் மக்களின் பொறுமையை நான்காண்டு சமாதான காலத்தில் சிங்களப் பேரினவாதம் நிறையவே சோதித்து விட்டது. இனிமேலும் இத்தகைய இனப்படுகொலைகளினூடே சோதிக்க விரும்பினால் - அது விபரீத முடிவுகளுக்கே வித்திடும்.

நான்கு லட்சம் தமிழர்களின் சவப்பெட்டிகளை அனுப்பும் கனவுடன் காத்திருக்கும் சிங்களப் பேரினவாதிகளை - சர்வதேசம் இனியாவது கண்டிக்க முன்வரவேண்டும். தமிழரின் போராட்டம் எந்த நிலைப்பாட்டிலிருந்து கட்டியெழுப்பப்பட்டது என்பதற்கு திருகோணமலை இனப்படுகொலை இன்னொரு உதாரணமாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

நாடும் நடப்பும்




# நீண்டகாலத் திட்டத்தில் திருமலை ஆக்கிரமிப்பும் இனக்கலவரமும்!

## ஊர்சுற்றியார் எழுதுவது

இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை சுமுகமான முறையில் காண வேண்டுமென்று சிங்களத் தலைவர்கள் எவராவது எப்போதாவது இதய சுத்தியுடன் நினைத்துச் செயல்பட்டார்கள் என்று நீர் நினைக்கிறீரா? என்று கேட்டபடிவந்த மர்ந்தார் நண்பர் பரதேசியார்.

இனப்பிரச்சினை இங்கு இருப்பதா க அவர்கள் நினைக்கவில்லை அவர்களைப் பொறுத்தவரை இன ஒழிப்பே அவர்களது திட்டமாக இருந்து வருகிறது. இலங்கையின் முதல் பிரதமராக இருந்த பெரிய சேனநாயகா உணவில் தன்னிறைவு என்ற கோஷத்தை எழுப்பி கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட முறையில் சிங்களவர்களைக் குடியேற்றி தமிழ் மக்களின் மண்ணை அபகரித்துச் சிங்கள மயமாக்க வழிவகுத்துக் கொடுத்தார். பெரிய சேனநாயகாவுக்கு பின்னர் ஆட்சிக்கு வந்தவர்களும் ஆதிக்க சக்திகளும் பேரினவாதிகளும் திருகோணமலையைச் சிங்கள மயமாக்கும் பணியைத் திட்டமிட்டுச் செயல்படுத்தத் தொடங்கினர். பெரிய சேனநாயகாவின் மருமகன் முறையான ஆர்.ஜி.சேனநாயகா திருகோணமலையில் தனியார் நிலங்களை விலைக்கு வாங்கி தென்னிலங்கை யிலிருந்து சிங்களவர்களைக் கொண்டுவந்து குடியேற்றினார். திருகோணமலை தமிழர்களையும் முஸ்லிம்களையுமே பெரும்பான்மையினராகக்-கொண்டிருந்தபோதும் திருமலை மாவட்ட அரசாங்க அதிபராக சிங்களவரே தொடர்ந்து நியமிக்கப்பட்டு வருகிறார். அரசாங்க அலுவலகங்களிலும் சிங்களவர்களே உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுகிறார்கள். காவல்துறையினரும் பெரும்பாலும் சிங்களவர்களாகவே இருந்து வருகின்றனர். திருகோணமலையைச் சிங்கள மயமாக்குவதே ஆட்சியாளர்களினதும் அதிகார வர்க்கத்தினரதும் ஆன்மீகத் தலைவர்களினதும் திட்டமிட்ட நடவடிக்கைகளாக இருந்து வருகிறது என்று சொன்னேன்.

1950 களுக்கு முன்னர் திருகோணமலை கடற்கரைப் பகுதியில் காலத்துக்கு காலம் வாடியடித்து மீன்பிடித் தொழில் செய்ய வந்து திரும்பியவர்கள் பின்னர் இந்தப் பகுதியில் நிரந்தரமாகவே தங்கி மீன்பிடித் தொழில் செய்யத் தொடங்கிவிட்டனர். இவர்களின் உதவியுடன் வந்து காய்கறிவிற்பனையில் ஈடுபட்டவர்கள் அந்தச் சந்தியையே தமது நாட்டாண்மைக்குத் தளமாக்கிக் கொண்டனர். மாநகரசபை சந்தைக்குக் கட்டடம் கட்டிக் கொடுத்தும் கூட அதைப் புறக்கணித்துத் தமது வியாபார இடத்தையே தலைமையிடமாகக் கொண்டிருக்கின்றனர. என்று பரதேசியார் தொடர்ந்து சொன்னார்.

திருகோணமலை சிங்களவருக்குத்தான் சொந்தமானது என்பதைக் காட்டிக் கொள்வதற்கு சிங்கள வர்த்தகர்கள் சிலரின் நாட்டாண்மை தலையெடுத்து நின்றது. இதைத் தொடர்ந்து திருமலை தமிழ் மக்களின் பாரம்பரிய பூமி என்று தமிழர் சிலர் எதிர்த்துச் செயல்பட்டனர். திருகோணமலை மூதூர்ப் பகுதிகளில் தமிழர்களையும் முஸ்லிம்களையும் மோதவிடுவதிலும் சிங்கள ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் பல தடவைகளில் முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றனர். என்று நான் சொன்னேன்.

திருகோணமலையிலும் கிழக்கு மாகாணத்திலும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்தி இரு சமூகங்களும் பிளவுபட்டுப் பிரிந்து நிற்கத் தாங்கள் ஆதாயமடை யலாம் என்று சிங்கள அரசியல்வாதிகள் சிலர் நினைத்தனர். இது சில சமயங்களில் வெற்றியுமளித்தது. இதன் உண்மைச் சொருபத்தை உணர்ந்துகொண்ட மக்கள் ஒற்று மைப்பட்டதால் அவர்களின் இந்த முயற்சி வெற்றியளிக்காமல் போய்விட்டது என்று பரதேசியார் சொன்னார்.

இப்பொழுது மீண்டும் இலங்கையில் இனக்கலகம் வெடிக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. நோர்வேயை வெளியேற்ற வேண்டுமென்று கூச்சலிட்ட ஜே.வி.பி, ஹெல உறுமயக் காரர்களுக்கும் இது நல்ல வாய்ப்பாகும். இதேசமயம் புலிகளின் கொட்டத்தை அடக்கவேண்டுமென்றும் புலிகள்தான் தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதிகள் அல்ல என்றும் கூச்சலிட்ட துணைப் படையினருக்கும் பேரினவாத அமைப்புக்களுக்கும் இது மகிழ்ச்சியளிப்பதாக இருக்கும் ஏன்று நான் சொன்னேன்.

திருகோணமலையில் இந்த முறை வெடிச்சத்தம் கேட்டதும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் குரல் கொடுத்திருக்கிறார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு திருமலைச் சம்பவங்களுக்கு கவலை தெரிவித்திருக்கிறார் என்று சொன்ன பரதேசியார் - நரசிம்மராவ் மாதிரி இல்லாமல் இவர் கொஞ்சம் ஆழமாகவே பேசியிருப்பார். திருமலையில் இந்தியா குத்தகைக்கு எடுத்திருக்கிற எண்ணைத் தாங்கிகளையும் பாதுகாக்க வேண்டும் அல்லவா? அது மட்டுமல்ல முன்பு விடுதலைப் புலிகளால் திருமலைக்கு ஏற்படக்கூடிய ஆபத்தினால் இந் தியாவின் பாதுகாப்புக்கும் ஆபத்து என்று கதிர்காமர் பயமுறுத்தியிருந்தாரல்லவா. அந்த அபாயம் இப்போது சிறிலங்கா படைகளினாலும், குண்டர்களினாலும் ஏற்படலாமென்றும் இந்தியா சிந்திக்கலாமல்லவா? என்று பரதேசி யார் கேட்டார்.

திருமலைச் சம்பவங்கள் பற்றி ஐ.நா.செயலாளர் நாயகமும் கவலை தெரிவித்திருக்கிறார். இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டுமிருக்கிறார். எங்கே குண்டு வெடித்தாலும் புலிகள் மீது பழியைப் போட்டுப் பிரசாரம் செய்யும் கொழும்பு ஊடகங்கள் இப்போதும் கிளைமோர் கண்ணிவெடியில் இராணுவமும், கடற்படையினரும் கொல்லப்பட்டதைத்தான் பெரிது படுத்திப் பிரசாரம் செய்கின்றனவேயொழிய உயர் பாதுகாப்பு வலயத்தினுள்ள விக்னேஸ்வரன் கொல்லப்பட்டது பற்றியோ இதற்கு முன்னும் பின்னும் அப்பாவிகள் பலர் துணைப் படையினரால் கொல்லப்பட்டுவருவது பற்றியோ பேசக் காணோம் என்று நான் சொன்னேன்.

நீண்டகாலத் திட்டத்துடன் திருகோணமலை ஆக்கிரமிப்பு நடைபெற்றுவருகிறது. கடும் பயங்கரக் குற்றவாளிகளைக் கூடத் தாம் திருமலையில் குடியேற்றப்போவதாகச் சொன்ன லலித் அத்துலத்முதலி அப்படிக் குடியேற்றவும் செய்தார். நேற்றுத் திருகோணமலையில் இந்தத் துரதிஷ்ட சம்பவங்கள் நிகழ்ந்து தமிழ் மக்கள் கவலையில் ஆழ்ந்திருக்கும் சமயத்தில் யாழ்ப்பாணத்தில், தென்மராட்சியில், சாவகச்சேரியில் மற்றும் சில பகுதிகளிலும் நேற்றுச் சிலர் சுட்டுக் கொல்லப்பட்ட செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன. துணைப்படைகளே இந்தக் கொலைகளைச் செய்து வருவதாகவும் ஆயுதப் படைகள் இதற்கு உதவியாக இருந்ததாகவும் செய்திகள் தெரிவித்தன என்று பரதேசியார் சொன்னார்.

ஜெனிவா மாநாட்டுக்கு விடுதலைப் புலிகள் போவார்களா? அவர்கள் போகத்தான் வேண்டுமா? என்று கேட்டபடியே பரதேசியார் நடந்தார்.

போர்நிறுத்த ஒப்பந்தப்படி இருதரப்பும் பதினாலுநாள் முன்னறிவித்தலுடன் போருக்கு ஆயத்தமாகலாம். ஆனால் இப்போது இரு தரப்புக்குமிடையில் ஏற்படும் முறுகலைப் பார்த்தால் முன்னறிவித்தல் இல்லாமலே எந்த நேரமும் போர் தொடங்கும் போலிருக்கிறதே என்று கேட்டேன்.

நாள், நட்சத்திரம் பார்த்துத்தானா மோதலும், போரும் ஏற்படும் என்று நடந்தார் பரதேசியார்.

# விய புது வருடம் உங்களுக்கு எப்படி?

## கடக ராசி



**புனர்பூசம் 4 ஆம் கால், பூசம், ஆயிலியம்**

கடகராசியில் பிறந்தவர்களுக்கு வருடம் ஏழரைச் சனியுடன் பிறக்கின்றது. குரு பகவானும் 28.10. 2006 முடிய 4 ஆம் வீட்டில் சஞ்சரிக்கிறார். தொழில், பொருளாதார ரீதியில் நெருக்கடிகள் ஏற்பட்டபடியே இருக்கும். இந்தக் காலம் ஒரு சோதனைக் காலமாக அமையும். பண விடயத்தில் மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டும். புதிய கடன்களும் ஏற்படலாம். கூட்டாளிகள் என்று நினைப்பவர்களே துரோகம் செய்வர். தேகசுகம், குடும்பசுகம் என்பனவும் பாதிப்படையும். வாகனம் ஓடுபவர்களாயின் மிக்க அவதானம் தேவை. எதிர்பாராத விபத்துக்களைச் சந்திக்க நேரும். குடும்பத்திலும், உறவினர்களிடத்தும் சச்சரவுகள் உண்டாகும். நண்பர்கள் கூட சில சந்தர்ப்பங்களில் மறைமுக எதிர்ப்புகளைச் செய்வார்கள். சில சமயங்களில் வீண் வழக்குகள் கூட ஏற்படலாம். யாருக்கும் பிணை நிற்பதைத் தவிர்க்க வேண்டும். சனீஸ்வரனுக்கு வழிபாடுகளை மேற்கொள்வது நன்று.

28.10.2006 குரு பகவான் 5 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்யத் தொடங்குவர். ஏழரைச்சனி இருந்தாலும் குரு பகவான் கைகொடுப்பார். வாழ்வில் ஏற்பட்ட பிரச்சினைகள் குறைந்து. ஓரளவு நிம்மதி உண்டாகும். பொருளாதார ரீதியான நெருக்கடிகள் குறையும். உடல் நலம் தேறும். மனைவி, பிள்ளைகள் வழி ஆரோக்கியம் தென்படும். மனத்தில் புதிய உற்சாகம் தோன்றும். திருமணம் போன்ற சுப கருமங்களிலும் தடை நீங்கி கருமம் கைகூடும். கொடுக்கல், வாங்கல்களில் இருந்த சிக்கல்கள் படிப்படியாக நீங்கும். சிறு சிறு சுகக்குறைவுகள் காணப்பட்டாலும், அவை உடனுக்குடன் சுகமாகும். மறைமுக எதிர்ப்புகள் யாவும் நீங்கும். முன்பு தொடங்கிய வழக்குகள் இருந்தால் அவை தற்போது வெற்றியை உண்டாக்கும். 12.10. 2006 இல் ராகு 8 இலும், குரு 2இலும் சஞ்சரிப்பதால், வருடப்பிற் பகுதியில் குடும்ப வாழ்வில் ஒற்றுமை குறையும். சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

உத்தியோகத்தர்கள் வருட ஆரம்பத்தில் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். அதிகமான அலைச்சல் பிரயாணங்கள் ஏற்படும். இடமாற்றங்கள் ஏற்பட்டு அமைதி குன்றும். பதவி உயர்வுகள் தள்ளிப் போகும். தேகசுகத்தைப் பேண வேண்டும். அன்றாடச் செலவுகளுக்குப் பற்றாக்குறை இருக்கும். 28. 10.2006 இன் மேல் குரு மாற்றத்தின் பின் ஓரளவு நற்பலன்கள் காணலாம். அதிகாரிகளை அனுசரித்துப் போவது நன்று.

வர்த்தகர்களுக்கு வியாபாரத் துறையில் பலவித சங்கடங்களும், லாபக் குறைவும் காணும். பெரிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. அரசியல் வழியில் எதிர்பாராத சோதனைகள் ஏற்படலாகும். வியாபார நோக்கமாக குடும்பத்தைவிட்டுப் பிரிந்து செல்லவும் கூடும். தொழிலில் போட்டி, பொறாமைகள் ஏற்படும். கூட்டுத் தொழிலில் கூட்டாளிகளிடையே கருத்து வேற்றுமைகள் உண்டாகும். 28.10. 2006 இன் மேல் ஓரளவு திருத்தம் ஏற்படும். தொழிலில் லாபமும் கிட்டும். வியாபாரத்தை விரிவுபடுத்த முடியும்.

பெண்களுக்கு குடும்ப வாழ்வில் பிரச்சினைகள் தோன்றும். கணவன், மனைவி ஒற்றுமை குறையும். தேகசுகமும் இடையிடையே பாதிக்கப்படும். திருமண சுப கருமங்கள் கைகூடாது. உறவினர்களிடையே விரோதங்கள் ஏற்படும். மாதவிடாய்த் தொந்தரவுகளும், கர்ப்பக் கோளாறுகளும் ஏற்படலாம். சிலருக்கு உயர்ரத்த அழுத்தம் ஏற்படக்கூடும். கொடுக்கல் வாங்கல்களிலும் பிரச்சினை தோன்றும். வருட பிற்பாதியில் பல வகையாலும் திருத்தங்களைக் காணமுடியும். குடும்ப ஒற்றுமை படிப்படியாக வலுக்கும்.

மாணவர்களுக்கு வருடத் தொடக்கம் கல்வியில் சோர்வாகவே இருக்கும். உடல் நலம் குறையும். நண்பர்களிடத்தில் அவதானமாக இருக்க வேண்டும். ஆசிரியர்களின் ஆதரவு குறையும். கல்வியில் கடின முயற்சியை மேற்கொள்ள வேண்டும். விளையாட்டுத்துறைகளில் ஆர்வம் கூடுதலாக இருக்கும். விடாமுயற்சியுடன் கல்வி கற்றால் வருடப் பிற்பாதி முன்னேற்றத்தைத் தரும்.

## சிங்க ராசி



**மகம், பூரம், உத்தரம் 1 ஆம் கால்**

சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு இந்த வருட ஆரம்பத்தில் ஏழரைச் சனி நடைபெறுவதும், குருபகவான் 3 ஆம் வீட்டில் சஞ்சரிப்பதும் சாதகமற்ற அமைப்பாகும். மேலும் இராகு, கேதுக்கள் 2 ஆம், 8 ஆம் வீடுகளில் இருப்பதும் பல தொல்லைகளை உண்டுபண்ணும். ஆகையால் இந்த வருடம் நன்மையான பலன்கள் காண்பது கடினம். தொழில் பொருளாதார ரீதியில் கடுமையான சோதனைகள் ஏற்படும். சமுதாயத்தில் கௌரவம், மதிப்பு குறையும். பொருளாதாரச் சிக்கல்களால் கடன் தொல்லைகளும் அதிகரிக்கும். தொடங்கும் முயற்சிகளில் தேவையற்ற இடையூறுகள் குறுக்கிடும். சிலருக்கு வீண் பயணங்களும், செலவுகளும் காட்டும். தேக சௌக்கியம் இடையிடையே பாதிக்கப்பட்டு, வைத்தியச் செலவுகளைக் கூட்டும். 12-10-2006 இல் இராகு கேது 8 ஆம், 2 ஆம் வீடுகளுக்கு மாற்றம் பெறுவதால், குடும்ப வாழ்க்கையில் பிரச்சினைகள் மேலோங்கும். கணவன், மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் அதிகமாகும். உறவினர்களுடன் சண்டை, சச்சரவுகள் தோன்றும்.

28-10-2006 இல் குருபகவான் 4ஆம் இராசிக்கு மாற்றம் பெறுகிறார். இராகு, கேது 7,1 இல் சஞ்சரிக்கின்றனர். இந்தக் காலமும் அனுகூலமானதாக இல்லை. மிகவும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் அடிக்கடி நிகழும். பொறுமையைக் கையாள்வது நன்று. பொருளாதார நிலைகள் சாதகமாக அமையாது. கொடுக்கல் வாங்கல்களில் எவரையும் நம்பக் கூடாது. கடன்காரர்களின் தொல்லைகள் தாங்க முடியாமலிருக்கும். உறவினர்களிடையேயும், அயலவர்களிடையேயும் போட்டி பொறாமைகள் இருக்கும். மன அமைதியுடன் எல்லோரையும் சமாளித்துப் போனால் சிக்கல்களில் இருந்து மீள முடியும்.

உத்தியோகத்தர்களுக்கு இந்த ஆண்டில் பல சிக்கல்கள் ஏற்பட்ட வண்ணமிருக்கும். தொழிலில் கவனம் செலுத்த முடியாமல் ஞாபக மறதி உண்டாகும். மேலதிகாரிகளின் தேவையற்ற கெடுபிடியால் வேலைப்பளுவும் அதிகரிக்கும். சிலருக்கு இடமாற்றம் ஏற்பட்டு, அலைச்சல் பிரயாசையைக் கூட்டும். புதிய வேலை வாய்ப்புக்கள் கிடையாது. உடல் மனோ நிலைகளும் சிறப்பாக இராது. அலுவலகத்தில் யாரோ செய்த தவறுக்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படலாம். உடன் பணிபுரிபவர்களுடன் சேர்ந்து நடத்தல் நன்று.

வர்த்தகர்களுக்கு வியாபார ரீதியில் கடுமையான போட்டிகளும், பொறாமைகளும் உண்டாகும். முதலீடுகளால் லாபம் இருக்காது. அரசாங்க ரீதியிலும் சில சோதனைகள் ஏற்படலாம். புதிய செயற்பாடுகளை இந்த வருடம் செயற்படுத்துவது நன்றல்ல. கொடுக்கல், வாங்கல்களில் சிக்கித் தவிக்க நேரும். எவற்றுக்காயினும் பிணை நிற்பதும் தொல்லையையே தரும். வேலையாட்கள் சாதகமாக அமையமாட்டார்கள். சில சந்தர்ப்பங்களில் பொருள் சேதமும். நட்டமும் ஏற்படலாகும். தொழில் சம்பந்தமான பிரயாணங்களால் அலைச்சலும், தேவையற்ற செலவுகளும் கூடும்.


பெண்களுக்கு உடல் நலத்தில் அதிக கவனம் தேவை. மாதவிடாய்க் கோளாறுகள், கர்ப்பக் கோளாறுகள் உண்டாகும். கணவன், மனைவி ஒற்றுமை பாதிக்கப்படுவதால், மன அமைதி குன்றும். திருமண சுபகருமங்களுக்குத் தடை ஏற்படலாகும். பண வரவுகள் தடைப்படுவதால், பற்றாக்குறை தோன்றும். கடன் வாங்கிக் காலங்கழிக்க வேண்டிவரும். உறவினர்களுடன் சாதகமற்ற நிலை உண்டாகும்.

மாணவர்களுக்கு கல்வி மிக மந்தமாகவே இருக்கும். கவனமெடுத்துப் படித்தாலும் அனைத்தும் மறந்து போகும். தெய்வ வழிபாடு செய்து கடின முயற்சி எடுத்துப் படித்தல் நன்று. உடல் கோளாறுகளும் ஒழுங்காகப் படிக்க விடாது. ஆசிரியர்களை அனுசரித்துக் கல்வியை முன்னெடுக்க வேண்டும். பொதுவாகப் பரீட்சை பெறுபேறுகள் திருப்திகரமாக அமையாது.

(தொடரும்...)

சி.சிதம்பரநாதக் குருக்கள்

## 'எனக்காக அழாதீர்கள்!'



'எனக்காக அழாதீர்கள்
உங்களுக்காய் அழுங்களென்று
மன ஏட்டில் வரலாற்றை
மகிமையுடன் நீர் வரைந்து
சினமடையா சிலுவையினை
சுமந்து செல்லும் தூயவரே
வனவிலங்கு தான் போன்று
வசைமாரி பொழிந்தனராமோ?

பறவைக்கு கூடுண்டு
பல நரிக்கு குழிகளுண்டே
இறைவன் மகனுக்கோ
இடமில்லை தலை சாய்க்கவும்
நறுமணம் வீசுகின்ற
நல்லொழுக்க வாசகங்களை
பொறுமையுடன் புவிக்கீந்து
பெருமையுற உயிரை நீத்தீர்!

"பச்சை மரமே இவ்வாறானால்
பட்ட மரம் நீ தாங்குவாயோ"
இச்சைகொள் உலகை விட்டு
இதயத்தில் இறையருள் காண்க
நிச்சயம் துன்பம் நீங்கிடும்
நினைவு வரும் நாளெலாம்
கச்சிதமாய் கர்த்தரை தேடு
கவலை உன்வாழ்வு தேடா!

செ.தேவதாஸ்
குருநகர்.

## நூல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| சஞ்சிகையின் பெயர் | : | சுடரொளி |
| கௌரவஆசிரியர் | : | சி.சரவணபவன்(சிற்பி) |
| வெளியீடு | : | சுடரொளி பதிப்பகம், 15 ருற்லான்ட் வீதி, லண்டன். |




லண்டன் சுடரொளி சஞ்சிகையின் தை - மாசி இதழ் கிடைக்கப் பெற்றோம். புலம் பெயர் நாடுகளிலிருந்து அங்கு வாழும் மக்கள் தங்கள் தங்கள் பங்களிப்பை கலை இலக்கியங்கள் மூலம் வெளிப்படுத்தி தமிழுக்குப் பல பணியைப் புரிந்து வருகின்றனர்.

இந்த வகையில் லண்டனில் இருந்து வெளிவரும் சுடரொளி சஞ்சிகை தை - மாசி இதழில் ஆக்கபூர்வமான பல கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. விடிவை நோக்கி ஈழத் தமிழர்கள், அணிசேர் அருட்கவி ஆறாய்ப் பொழிந்தவர் என்ற சிற்பியின் கவிதையும், ஈழத்து நாடகமேதை வைரமுத்து பற்றி கலாநிதி காரை சுந்தரம்பிள்ளையின் கட்டுரையும், தமிழைக் காக்க காசி ஆனந்தனின் கட்டுரையும், மலையக எழுத்தாளர் அந்தனி ஜீவாவும் அவரது கலை இலக்கியப் பயணமும் எனும் கட்டுரைகளோடு இன்னும் பல கட்டுரைகளுடன் அழகிய முறையில் அச்சிட்டு இந்த இதழ் வெளிவந்துள்ளது.

யாமினி

| | | |
|---|---|---|
| சஞ்சிகையின் பெயர் | : | ஞானச்சுடர்(பங்குனி மலர் 2006) |
| வெளியீடு | : | சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை |




ஞானச் சுடர் சஞ்சிகையின் பங்குனி மாத மலர் கிடைக்கப் பெற்றோம். சரணம் சரணம் சந்நிதி வேலா என்று செல்வச்சந்நிதியின் மகிமையை சிவனேஸ்வரி பாலகிருஷ்ணனும், காரைக்கால் அம்மையார் அருளிச் செய்த அற்புதத் திருவந்தாதி ஒரு ஆய்வு, சிவஞான போதம் தரும் உண்மை நெறி விளக்கம், உண்ணும் போது ஒரு கைப்பிடி, தீப வழிபாடு, நலம் பலம் போன்ற பல சமயக் கட்டுரைகளுடன் இந்த இதழ் வெளிவந்துள்ளது.

ஞானச்சுடர் சஞ்சிகை ஒவ்வொரு சைவ மக்களின் வீடுகளில் வைத்திருக்க வேண்டிய ஒரு சஞ்சிகையாகும். தனிப்பட்ட பிரதிகளை வாங்காது ஆண்டுச் சந்தா செலுத்தி ஞானச்சுடர் சஞ்சிகை வளர்ச்சிக்கும், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் அரிய பணிக்கு ஆதரவு அளிக்கலாம்.

சோமு

| | | |
|---|---|---|
| சஞ்சிகையின் பெயர் | : | பாக்யா |
| ஆசிரியர் | : | எஸ்.இராசகுலேந்திரன் |
| வெளியீடு | : | பாக்யா காகிதாதிகள். இல.121 கே.கே.எஸ் வீதி, கொக்குவில். |




பாக்யா சிறுவர் மாத இதழின் பங்குனி இதழ் கிடைக்கப் பெற்றோம். யாழ்ப்பாண பொது நூலகக் கட்டடத்தை அட்டைப் படமாகக் கொண்டு வெளிவந்திருக்கும் இந்த இதழில் - கணினியின் பிரயோகங்கள், இலங்கையின் வரலாறு, மாணவரும் சிறு சேமிப்பும், இயற்கை அனர்த்தம் போன்ற கட்டுரைகளுடன்-

பெரிய பூதமும் குட்டிப் பூதமும், தன்னைப் போல உலகம் போன்று சிறுவர் கதைகளும், பல அறிவியல் சம்பந்தமான துணுக்குகளும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன.

மொத்தத்தில் சிறார்களுக்கேற்ற முறையில் வெளிவரும் இந்த பாக்யா இதழை ஒவ்வொருவரும் ஆதரிப்பது கடமையாகும்.

வாசன்

# வன்முறைச் சூழலை...

கேள்வி:- இன்றைய சந்திப்பு தொடர்பாக?

பதில்:- போர்நிறுத்தச் சூழலைச் சீர்குலைத்து எமது தாயகப் பிரதேசத்தில் மீண்டும் வன்முறைச் சூழலை இலங்கை அரசும், படைத் தரப்பும் வலிந்து உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை கண்காணிப்புக்குழுவுக்கு சுட்டிக் காட்டியுள்ளோம்.

ஜெனீவா உடன்பாட்டுக்குப் பின்னர் ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள், படைத்தரப்பினுடைய கெடுபிடிகள், படுகொலைகள் என அனைத்துச் சம்பவங்களையும் எடுத்து விளக்கினோம். ஜெனீவா உடன்பாட்டை மதிப்பதாகவோ, போர்நிறுத்த உடன்பாட்டை மதிப்பதாகவோ இலங்கை அரசாங்கம் தங்களுடைய செயற்பாடுகளில் வெளிப்படுத்தவில்லை.

கள நிலைமையில் எமது தாயகப் பிரதேசத்தில் மிக மோசமான நிலைமைகளை இலங்கைப் படைகள் உருவாக்கியிருக்கின்றன. போராளிகள், பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் ஒரு கட்டமாகத்தான் திருகோணமலையில் மக்களால் நேசிக்கப்பட்ட மாமனிதர் விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டதும், அதனைத் தொடர்ந்து எமது மக்கள் மத்தியில் ஒரு கொந்தளிப்பான சூழல் உருவானதுமாகும்.

திருகோணமலையில் ஒரு குண்டு வெடிப்பை உருவாக்கி உடனடியாகவே இனக்கலவரத்தை நடத்தி எங்கள் மக்கள் பெருமளவில் கொல்லப்பட்டிருக்கின்றனர். அகதிகள் ஆக்கப்பட்டுள்ளனர்.

பெருமளவில் மக்கள் காயப்படுத்தப்பட்டுள்ளனர். இன முரண்பாட்டை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளாக திருகோணமலை நிகழ்வுகள் அமைந்துள்ளன என்பதை கண்காணிப்புக் குழுவிடம் விளக்கியுள்ளோம்.

திருகோணமலையில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டுமானால் - போர்நிறுத்த உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துவதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

அரசு தனது படைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும். அரச படைகள் எல்லா இடங்களிலும் தமது இனப் படுகொலைகளையும், போராளிகள், பொதுமக்கள் மீதான தாக்குதல்களையும், வன்முறைகளையும் தீவிரப்படுத்தியுள்ளன.

இன்று யாழ்ப்பாணத்தில் மூன்று அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். வவுனியா பிரதேசத்தில் இராணுவத்தினருடைய கிளைமோரில் எங்களுடைய துணைப் படை வீரர்கள் இறந்திருக்கின்றனர்.

மன்னார் முள்ளிக்குளப் பிரதேசத்தில்கூட ஒரு சம்பவம் நடந்துள்ளது. அந்தப் பிரதேசத்தில் ஆழ ஊடுருவும் படையணியின் கிளைமோர் தாக்குதலில் பொதுமக்கள் மூவர் கொல்லப்பட்டனர். மட்டக்களப்பில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு எமது போராளிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இப்படியாகப் பரந்தளவில் இராணுவம் தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது. மட்டக்களப்பில் பல கொலைகளைப் புரிந்தவர்களை இராணுவம், பொலிஸ் பாதுகாப்புடன் அலுவலகம் திறந்து இயங்க வைத்துள்ளனர். இத்தகைய செயற்பாடுகள் ஒரு போர்நிறுத்த உடன்பாட்டுச் சூழலைப் பேணுவதற்கு உதவாது.

நிலைமைகளைச் சீர்குலைத்து போர்நிறுத்தச் சூழலை இல்லாமல் செய்கின்ற ஒரு நடவடிக்கையை அரசும், படைகளும் ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை நாம் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு சுட்டிக் காட்டியிருக்கின்றோம்.

அதேநேரம் - ஜெனிவாப் பேச்சுக்குச் செல்வதற்கு புலிகள் எப்போதும் தடையாக இல்லை என்பதைக் கண்காணிப்புக்குழுத் தலைவருக்குத் தெளிவாக்கியுள்ளோம்.

ஏனெனில், எங்கள் தளபதிகளை எமது தலைமைப்பீடம் அழைத்து கலந்தாலோசித்து மத்திய குழு கூடிய பின்னர் தான் பேச்சுக்குச் செல்லக் கூடியதாக இருக்கும்.

இவை இன்று நாம் கூறியவையல்ல. முன்னைய பேச்சு முடித்து வந்து, ஒரு மாதத்துக்கு முன்னரே நாம் வலியுறுத்தி வந்திருக்கிறோம். நோர்வே அனுசரணையாளர்களுக்கு இதனை நேரடியாகக் கூறியிருக்கிறோம்.

எங்கள் தளபதிகளுடைய போக்குவரத்தின் அவசியத்தையும், எங்களுடைய தளபதிகள் எமது தலைமைப் பீடத்தைச் சந்திக்க வேண்டியதன் அவசியத்தை நிறைவேற்றினால் தான் - நாங்கள் ஜெனிவாப் பேச்சுக்குச் செல்லக்கூடிய சாத்தியம் ஏற்படும் என்பதையும் பல நாட்களுக்கு முன்னரே தெளிவுபடுத்தியிருந்தோம்.

ஆனால், பேச்சுவார்த்தைக்குரிய நாட்கள் நெருங்கிய நிலையில் அரசு வலியுறுத்திக் கொண்டிருப்பது அர்த்தம் இல்லாதது.

சர்வதேச சமூகத்துக்கும், அனுசரணையாளர்கள் எல்லோருக்கும் சென்றடையக்கூடிய வகையில் எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

இரண்டாம் கட்டப் பேச்சுக்குச் செல்வதற்கு நாங்கள் தடையானவர்களல்ல. பேச்சுவார்த்தைக்குச் செல்வதற்கு தடைகள் ஏற்படுத்தியிருப்பது இலங்கை அரசாங்கமும், அதன் படைகளின் செயற்பாடுகளும், நிபந்தனைகளும்தான்.

நான்கரை வருடங்களுக்கு மேலாக எங்களுடைய தளபதிகளின் வான்வெளிப் போக்குவரத்து, கடல் வழிப் போக்குவரத்து ஆகியவற்றில் ஒரு நடைமுறை பேணப்பட்டு வந்தது. இந்த நடைமுறைகளை நிராகரித்து - எங்கள் தலைமைப்பீடம் முக்கிய தீர்மானங்கள் எடுப்பதற்கான சந்திப்புக்களை முடக்கி, நெருக்குவாரத்தை ஏற்படுத்தி புதிய நிபந்தனைகளை விதித்தது. ஜெனிவாப் பேச்சுக்குச் செல்கின்ற முயற்சியைத் தடுக்கின்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது என்பதை இன்று சுட்டிக்காட்டியுள்ளோம்.

ஜெனிவாப் பேச்சுக்கு நாங்கள் செல்வதா இல்லையா என்பது சர்வதேச சமூகத்தின் கையில்தான் உள்ளது. போர்நிறுத்த உடன்பாட்டிலுள்ள நடைமுறைகளை அரசாங்கம் இல்லாதொழித்துப் புதிய நிபந்தனைகளையும், நடைமுறைகளைக் கொண்டு வருவதையும், போர்நிறுத்த உடன்பாட்டை மாற்றியமைக்க முயல்வதையும் நாம் முற்றாக நிராகரிக்கிறோம் என்பதையும் தெரிவித்தோம்.

இந்த முயற்சிகளானது நோர்வேயின் அனுசரணைப் பணிக்கும், கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளுக்கும்கூட பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளோம்.

இதனைக் கண்காணிப்புக்குழுத் தலைவர் தெளிவாக ஏற்றுக் கொண்டு மீண்டும் எங்களுடன் சந்தித்துப் புதிய சில வழிமுறைகளைப் பரிந்துரைத்திருக்கின்றார்.

அந்தப் பரிந்துரையை எமது தலைமைப்பீடம் ஏற்றுக் கொண்டுள்ளது. அதுபற்றிய தீர்மானம் எடுக்க வேண்டியது கண்காணிப்புக்குழுவினுடைய பொறுப்பு.

கேள்வி :- புதிய வழிமுறை என்று கூறுகின்றீர்களே. தளபதிகளுடைய போக்குவரத்துத் தொடர்பானதா?

பதில்:- ஜெனிவாப் பேச்சுக்குச் செல்வதற்கு முக்கிய தடையாக உள்ளதானது - தலைமைப் பீடத்தை எமது தளபதிகள் சந்திக்க முடியாமல் இருப்பதுதான்.

அந்தச் சந்திப்பை ஏற்படுத்தித் தரும்படிதான் நாம் கோரியிருந்தோம். அதற்கு புதிய வழிமுறைகள் தந்தார்கள். அதிலே ஒரு நடைமுறை தான் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

இலங்கைக் கடற்படையினரது பிரசன்னமோ, தொடர்புகளோ இல்லாமல் முழுக்க முழுக்க கண்காணிப்புக் குழுவினுடைய நேரடிப் பாதுகாப்பின் கீழ் எமது தளபதிகள் பயணம் செய்யத் தயாராக இருக்கின்றனர்.

எதிர்வரும் ஏப்ரல் 15 ஆம் திகதி எமது தளபதிகள் இங்கு வருவதற்கும், 22ஆம் திகதி திரும்பிச் செல்வதற்குமான ஏற்பாட்டை நாங்கள் கோரியிருக்கின்றோம். பேச்சுவார்த்தைக்குரிய நாட்கள் நெருங்கிய நிலையில் - போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் புதிய நடைமுறையை எமக்குத் தெரியப்படுத்தியிருப்பதால் பேச்சுக்கான காலத்தை சற்று பின்போடும்படியும் நாம் கோரியிருக்கிறோம்.

தலைமைப்பீடத்தை எமது தளபதிகள் சந்தித்து திரும்பிச் சென்ற பின்னர் பேச்சுக்குரிய நாட்களைத் தீர்மானிக்கும்படி நாம் கேட்டிருக்கிறோம். கண்காணிப்புக் குழுத் தலைவர் இது விடயத்தில் தான் விரைந்து முடிவெடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார். இன்றைய சந்திப்பில் முக்கியமான, இறுக்கமான சில முடிவுகளைத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

போர்நிறுத்தத்தைச் சீர்குலைக்கின்ற எல்லாவிதமான செயற்பாடுகளையும் இலங்கைப் படைகளும், துணை ஆயுதக் குழுக்களும் தீவிரப்படுத்தியுள்ளன.

பொதுமக்கள் பெருமளவில் கொல்லப்படுவதும், பொதுமக்கள் அச்சுறுத்தப்படும் நிலைமையும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் ஒரு கொந்தளிப்பான சூழலை உருவாக்கி போர் நிறுத்த சூழலையே இல்லாதொழிக்கும் ஒரு நடவடிக்கையாக இது அமைந்துள்ளது. இதற்குப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு விரைவாகத் தீர்வு காணவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

ஏனெனில், இலங்கை அரசாங்கம் நிலைமைகளைச் சீர்குலைத்து மோசமான நிலைமைகளை உருவாக்கி ஒரு போர்ச்சூழ்நிலைக்குள் எம்மைத் தள்ளி - எம்மீது பழியைப் போடுகின்ற பிரசாரத்தை சர்வதேசத்தில் முடுக்கிவிட்டுள்ளது.

பேச்சுவார்த்தைக்கும், சமாதான முயற்சிக்கும் அரசு தயாராக இருப்பதாகக் காட்டிக்கொண்டு - எமது தாயகத்தில் மக்கள் மீதான தாக்குதலையும், வன்முறைகளையும், இன அழிப்பு நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்திக்கொண்டு - சர்வதேச மட்டத்தில் பிழையான பிரசாரத்தை முன்னெடுத்து வருகிறது. எங்கள் தரப்பு நியாயத்தை சர்வதேச சமூகத்துக்கு தெளிவுபடுத்தும் நோக்கோடுதான் இன்றைய சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் ஊடாக எமது நிலைப்பாட்டைத் தெளிவாக முன்வைத்துள்ளோம்.

கள நிலைமைகள் சீராக வேண்டுமானால் - போர்நிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளைச் செம்மையாக அரசு பேணவேண்டும்.

போர்நிறுத்த உடன்படிக்கையை அரசும், படைகளும் மதித்து நடப்பார்களானால் - வன்முறைகள் நிறுத்தப்பட்டு, ஒரு சுமுக நிலைமை ஏற்படும். ஆனால் படைத்தரப்பும் , ஆயுதக் குழுவும் எதிர்மாறாகச் செயற்பட்டு வருகின்றன. நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவிட்டால் நிலைமைகள் மோசமான கட்டங்களை அடையும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளோம்.

இலங்கை அரசாங்கம் நல்ல சூழ்நிலையை உருவாக்கி பேச்சுவார்த்தை முயற்சிகளை முன்னெடுப்பது பொருத்தமானதாக இருக்கும். அதைவிடுத்து - கள நிலைமைகளில் ஒரு கடும் போக்கைக் கடைப்பிடித்துக் கொண்டு வெளிநாடுகளுக்கு மென்மையான போக்கைத் தான் கடைப்பிடிப்பதாகக் காட்டிக் கொள்வதையும் சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

கேள்வி:- வன்முறைகள் அதிகரித்துள்ள நிலையில் பேச்சுக்களில் கலந்துகொள்ள முடியும் என்று கருதுகிறீர்களா?

பதில்:- நிலைமைகள் மோசமாகவே உள்ளது. இருப்பினும், சர்வதேச சமூகம் இரு தரப்பும் சந்தித்துப் பேசும்படி கோருகின்றார்கள். நாம் போர்நிறுத்த அமுலாக்கத்தை வலியுறுத்துகின்றோம். சர்வதேசத்தின் வேண்டுகோளைச் செவிமடுக்க வேண்டியவர்களாக உள்ளோம். பேசுவது பிரச்சினையல்ல. பேச்சுக்கள் முன்னேற்றத்தையும், ஒரு மாற்றத்தையும் கொண்டுவராவிட்டால் பேசுவதில் பயனில்லை.

இந்தக் காலகட்டத்தில் பேசினாலும் போர்நிறுத்த அமுலாக்கத்தின் உறுதிப்பாட்டை அரசு பேணவேண்டும். சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பை நாம் நிறைவேற்றத் தயாராகவுள்ளோம்.

இலங்கை அரசுக்கும், படைகளுக்கும் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

கேள்வி :- மக்கள் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஊடாக அரசுக்கு எவ்வித அழுத்தத்தை தாங்கள் பிரயோகித்தீர்கள்?

பதில் :- எமது விருப்பமும், மக்களின் விருப்பமும் அமைதி நிலவ வேண்டும் என்பதே. இதனைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊடாக அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம்.

போலியான அறிக்கைகளை அரசு வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும். கள நிலைமையில் உண்மைத் தன்மை இருக்க வேண்டும். போர்நிறுத்த அமுலாக்கத்தில் தான் எல்லாமே தங்கியுள்ளது.

கேள்வி :- கண்காணிப்புக்குழு மட்டுமல்லாது நோர்வே அரசினூடாகவும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த அரசுக்கு அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளதா?

பதில் :- நோர்வே அனுசரணையாளர்களுடனும், சர்வதேச சமூகத்துடனும் தொடர்புகளைப் பேணி வருகின்றோம். எமது நிலைப்பாடுகளைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றோம். சர்வதேச சமூகம் இவற்றில் கரிசனை கொள்ளும் என்று தான் நினைக்கிறேன்.

கேள்வி :- தளபதிகள் தலைமைப் பீடத்தைச் சந்தித்த பின்னர் எந்த நாளில் பேசுவது என ஆலோசிக்கப் பட்டதா?

பதில் :- எமது தளபதிகள் வந்து திரும்பியவுடன் அனுசரணையாளர்கள் அந்த முறையில் எடுக்கலாம். இதை அனுசரணையாளர்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## நமது ஈழநாடு சிறுவர் அரங்கம் - துருவன் நடத்திய

## போட்டி முடிவுகள்

### குறுக்கெழுத்துப் போட்டி இல.05

★ முதலாம் பரிசு - செல்வன் மூர்த்தி ரஜிதரன்
யா/ மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
(மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் ரூபா 500 பணப் பரிசு)

★ இரண்டாம் பரிசு - செல்வி தீபிகா சுப்பிரமணியம்
யா/ வேலணை மத்திய கல்லூரி.
(இல.303, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணத்திலுள்ள சிறிமுருகன் தொலைத்தொடர்பகம், முகவர் தபால் நிலைய நிறுவனத்தினரின் ரூபா 300 பணப் பரிசு)

★ மூன்றாம் பரிசு - செல்வி சர்மினி லோகநாதன்
யா/ விக்னேஸ்வராக் கல்லூரி.
(ஆடியபாதம் வீதி, கல்வியங்காட்டைச் சேர்ந்த அமரர் பரராஜசிங்கம் சுதன் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் ரூபா 200 பணப் பரிசு)

### பொது அறிவுப் போட்டி இல.05

★ முதலாம் பரிசு - செல்வன் தங்கராசா லக்ஸ்மன்
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.
(காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்திலிருக்கும் திருமுருகன் கொம்நெற் நிறுவனத்தினர் வழங்கும் ரூபா 300 பணப் பரிசு)

★ இரண்டாம் பரிசு - செல்வி பிரணவி சுப்பிரமணியம்
யா/ வேலணை மத்திய கல்லூரி.

★ மூன்றாம் பரிசு - செல்வன் சுப்பிரமணியம் பிருந்தன்
யா/ வேலணை மேற்கு நடராஜர் மகாவித்தியாலயம்.
(காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்திலிருக்கும் ஆசீர் வணிக நிலையத்தினரின் ரூபா 200, 100 பெறுமதியான பணப் பரிசில்கள்)

பரிசு பெறும் அதிஷ்டசாலிகளுக்கு எமது பாராட்டுக்கள். இவர்கள் தங்களை உறுதிப்படுத்தக்கூடிய சான்றினைச் சமர்ப்பித்து ஞாயிறு மற்றும் விடுமுறை நாள் தவிர்ந்த ஏனைய நாட்களில் எமது அலுவலகத்துக்கு வந்து தமது பரிசுக் கூப்பன்களைப் பெற்றுக் கொள்ளவும்.

- பிரதம ஆசிரியர்.

யாழ் மண்ணில்!
முழு மையான கணக்கியல் சார்
கணினிக் கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றது.
பல்கலைக்கழக மாணவர்கள்,
உயர்தொழில்நுட்ப மாணவர்கள்,
A/L நிறைவு செய்திருக்கும் மாணவர்கள்,
மற்றும் கணக்கியல் துறையில்
ஆர்வமுள்ளவர்களுக்கு, முதன் முதலாக,
Diploma in Office Management
⇨ AccPac
⇨ MYOB
⇨ Tally
⇨ Quick Books Premier
பதிவுகளுக்கு முந்துங்கள்!
பிரிவு I 20.04.2006 காலை 8.30
பிரிவு II 20.04.2006 மாலை 6.30
CICS Computer Technologies
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
E-mail: cicsjaffna@gmail.com
புத்தாண்டையும் விடுமுறையினையும் பயனுள்ளதாக்க
CICS உடன் இன்றே இணையுங்கள்!

AIMS
Career Development Program
Create as you like
Desktop Publishing
play as you like
Computing for KIDS
Start on : 15-04-06
Batch I : 9.00 am
Batch II : 4.00 pm
Vacation @ AIMS
Center for FOSS & LAMP

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# திருமலை சம்பவங்களை கண்டித்து அம்பாறையில் நேற்று ஹர்த்தால்

அம்பாறை —

அம்பாறையில் தமிழ் பிரதேசங்களில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. திருகோணமலையில் நேற்று முன்தினம் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட வன்முறைகளைக் கண்டித்து இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

வீதிகள் முட்கம்பிகளால் தடை செய்யப்பட்டு மக்கள் போக்குவரத்தின்றி காணப்பட்டது.

இதேவேளை கல்முனை வீதி சந்தியிலும், தம்பிலுவில் பிரதான வீதியிலும், சுடலையிலும் நேற்று முற்பகல் 2 குண்டு வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றன. எனினும், சேதங்கள் எவையும் ஏற்படவில்லை என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

# திருமலை நகர வர்த்தகர்களை பொலிஸ்மா அதிபர் சந்திப்பு

திருகோணமலை —

திருகோணமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை அடுத்து அங்கு மூடப்பட்டிருக்கும் வர்த்தக நிலையங்களைத் திறந்து இயல்பு நிலையை ஏற்படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ வர்த்தகர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருகோணமலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் பின்னர் அங்கு ஏற்பட்டிருக்கும் நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காகச் சென்றிருந்த பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, திருகோணமலையிலுள்ள கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் வர்த்தக சம்மேளனப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - திருகோணமலையில் ஏற்பட்டிருக்கும் வன்முறைச் சம்பவங்களின் போது ஏற்பட்ட சேதங்களுக்காக பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

அத்துடன், வன்முறைச் சம்பவங்கள் மீண்டும் ஏற்படாதிருக்க அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டுமென்றும், மூடப்பட்டிருக்கும் வர்த்தக நிலையங்களை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் திறப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமெனவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொலிஸ்மா அதிபர் மற்றும் கடற்படை அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட உயர்மட்ட மாநாடு ஒன்று நேற்று திருகோணமலை கடற்படைத்தளத்தில் இடம்பெற்றதாகத் தெரிய வருகிறது. (10,4)

### புலிகளின்...

மாற்று யோசனைகளில் ஒன்றையே புலிகள் ஏற்றுக்கொண்டதாக தெரிய வருகிறது. விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டில் விடாப்பிடியாக இருந்ததாலேயே கண்காணிப்புக் குழு மாற்று யோசனையை முன்வைத்ததாக தெரியவருகிறது.

## ஒரே நாளில் நான்கு...

மிருசுவில் - உசன் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 8.30 மணியளவில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வீட்டுவளவினுள் நின்றிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களால் இவர் சுடப்பட்டார்.

தையல் கடை உரிமையாளரான அப்பன் என்று அழைக்கப்படும் செல்வரட்ணம் விஜயகுமார் (வயது 25) என்பவரே இந்த சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற சாவகச்சேரி மாவட்ட நீதிபதி பிறேம் சங்கர் விசாரணை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டார். இதையடுத்து இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவரது வீட்டுக்கு அருகாமையில் இராணுவ முகாம்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நான்கு படுகொலைகளும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டதாக புலிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பகுதியில் வீதியில் சென்று கொண்டிருந்த இவரை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் வழிமறித்து துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச்சென்றனர்.

இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, மீசாலை வடக்கு அல்லாரையில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் முதியவர் ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச்சம்பவத்தில் ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரியான தம்பையா இரட்ணசபாபதி (வயது 64) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில் - இவரது வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் வீட்டில் வைத்தே இவரை துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றனர்.

இவரது சடலமும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு பிரேதபரிசோதனைக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் வந்த மூவரை காணவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம் —

வவுனியா, மன்னார் ஆகிய இடங்களிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மாணவர் ஒருவர் உட்பட மூவரைக் காணவில்லை என மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. லக்சபானா வீதி, தோணிக்கல் வவுனியாவைச் சேர்ந்த நல்லையா சொரூபன், நெடுங்கேணியைச் சேர்ந்த றெஜினோல்ட் அன்சலஸ் மெல்வின் (வயது 25) மற்றும், 3 ஆம் கட்டை குறுக்குத் தெரு சின்னக்கடை மன்னாரைச் சேர்ந்த றெஜினோல்ட் சுதர்சன் ஆகிய மூவருமே காணாமற்போயுள்ளதாக உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தோணிக்கல்லைச் சேர்ந்த நல்லையா சொரூபன், கடந்த 12 ஆம் திகதி மாசிவன், நீர்வேலி மேற்கில் நடைபெற்ற உறவினரின் திருமண நிகழ்வில் கலந்து கொண்டு விட்டு அன்றைய தினம் மாலை 5 மணியளவில் MJ 3237 எனும் இலக்கமுடைய மோட்டார் சைக்கிளில் நண்பர் றெஜினோல்ட் அன்சலஸ் மெல்வனுடன் அச்சுவேலிக்கு செல்வதாக கூறிச் சென்றார். இவர் இதுவரை வீடு திரும்பவில்லை என அவரது உறவினரான சிவராசா யோகரட்ணம் முறைப்பாடு செய்துள்ளார்.

இவரது உடம்பில் மோட்டார் சைக்கிள் விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் உள்ளதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்சலஸ் மெல்வின் நெடுங்கேணியைச் சேர்ந்தவரெனவும் இருவரும் குறித்த திருமண வீட்டுக்கு வந்த பின்னர் சொரூபனுடன் சேர்ந்து அச்சுவேலிக்கு சென்றனரெனவும் இதுவரை வீடு திரும்பவில்லை எனவும் இவரது மனைவி இளையதம்பி இன்பரட்ணம் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 3 ஆம் குறுக்குத் தெரு சின்னக்கடை, மன்னாரைச் சேர்ந்த றெஜினோல்ட் - சுதர்சன் என்பவர் 7ஆம் திகதி காலை 8 மணியளவில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மேசைப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதாக கூறி புறப்பட்டவர் இதுவரை வீடு திரும்பவில்லையென அவரது தந்தையான ஆசிரியர் செல்லையா மகாதேவன் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த மூவர் தொடர்பான விபரங்கள் தெரிந்தவர்கள் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு அறியத்தருமாறு விசாரணை அதிகாரி சுவேந்திரராசா அறிவித்துள்ளார்.

## படையினரின் கிளைமோரில் துணைப்படை வீரர் வீரச்சாவு

வவுனியா —

ஓமந்தையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமான இளமருதன்குளம் பகுதியில் உழவு இயந்திரம் மீது இராணுவத்தினரின் ஆழ ஊடுருவித் தாக்கும் அணியினர் நேற்றுக்காலை 8.30 மணியளவில் நடத்திய கிளைமோர் தாக்குதலில் தமிழீழ தேசிய துணைப்படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் சம்பவ இடத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் முன்னிலையில் கிளைமோர் குண்டு இரண்டும் இராணுவ எச்சங்களும் மீட்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

## வாகனேரி தாக்குதலில் போராளி வீரச்சாவு!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வாகனேரி பகுதியில் இராணுவத்தினரும், துணை ஆயுதக்குழுவினரும் இணைந்து நடத்திய தாக்குதலில் இதயவேந்தன் என்ற போராளி வீரச்சாவடைந்தார்.

இந்தத் தாக்குதலையடுத்து விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் மேற்கொண்டபோது இராணுவத்தினரும் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவர் உயிரிழந்ததாகவும், நான்கு பேர் காயமடைந்ததாகவும் இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

## வெடி விபத்தில் போராளி வீரச்சாவு

கிளிநொச்சி —

கடந்த 11 ஆம் திகதி ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தில் போராளி ஒருவர் சாவடைந்தார்.

வீரவேங்கை உலகேசி (யோகநாதன் விஜய்) நிரந்தர முகவரி 4ஆம் வட்டாரம் புங்குடுதீவு, தற்காலிக முகவரி 117/5 ஆலடி வீதி தோணிக்கல் வவுனியாவைச் சேர்ந்தவரே சாவடைந்தவராவார்.

# படையினரின் கிளைமோர் தாக்குதலில் முள்ளிக்குளத்தில் பெண் ஒருவர் பலி!

மன்னார் —

மன்னாரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான முள்ளிக்குளத்தில் இராணுவத்தினர் ஊடுருவி நடத்திய கிளைமோர் தாக்குதலில் பெண் ஒருவர் உடல் சிதறிப் பலியானார்.

நேற்று பிற்பகல் வயலில் அருவி வெட்டுவதற்காக உழவு இயந்திரம் ஒன்றில் சென்றுகொண்டிருந்த பொது மக்கள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் துரைராசா இலட்சுமி (வயது 52) என்பவரே உயிரிழந்தார்.

பாரதி என்று அழைக்கப்படும் பாக்கியநாதன் மோகன்ராஜ் (வயது 23), பாக்கிய நாதன் ராஜினிதேவி (வயது 25) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து குறித்த இடத்திலிருந்து 4 கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இது படையினரின் ஆழ ஊடுருவித்தாக்கும் படைப்பிரிவின் தாக்குதலென குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது போர்நிறுத்த உடன்பாட்டை மீறும் செயலென மன்னார் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப் புலிகள் முறையிட்டுள்ளனர்.

### திருமலையில்...

நிலையில் உள்ளன. மேலும் ஒரு தமிழரது சடலமும் அடையாளம் காணப்படவில்லை.

திருகோணமலை மருத்துவ அதிகாரிகள் திருமதி கே.ஞானகுணாளன் மற்றும் காமினி குணதிலக ஆகியோர் பிரேதபரிசோதனை செய்தனர்.

## கண்காணிப்புக்குழு...

பொதுமக்களின் படகுகளில் ஹென்றிக்சனுடன் முல்லைத்தீவுக்கு வரவுள்ளனர்.

இதேமுறையில் ஒரு வாரத்துக்குப் பின்னர் 22 ஆம் திகதி கிழக்குப் பகுதிக்கு விடுதலைப் புலிகளின் தளபதிகள் அனுப்பிவைக்கப்படுவர்.

இதேவேளை, கிழக்கிலிருந்து விடுதலைப் புலி களின் தளபதிகளை மத்தியகுழு கூட்டத்துக்கு அழைத்து வருவதற்கான வான்வழிப் பயணத்தை அரசாங்கம் மறுத்திருந்தது.

இதையடுத்து, தமது படகில் கண்காணிப்புக்குழுவினருடன் விடுதலைப் புலிகள் பயணம் மேற்கொள்வர் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இதையும் அரசாங்கம் நிராகரித்து, நிபந்தனைகள் விதித்திருந்தது.

இந்த நிலையில், கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் கண்காணிப்புக்குழு தலைவருடன் பொதுமக்களின் படகில் விடுதலைப் புலிகளின் தளபதிகள் பயணம் மேற்கொள்ள முடிவுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

Vacation @ AIMS
Career Development Program
Work as you like
Pc Applications
இக் கற்கை நெறி தனிமனிதர் சார்ந்த அல்லது அலுவலக தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய செய்முறையுடன் கூடிய கற்கை நெறியாக அமையும்
Handle as you like
Pc Maintenance
இக் கற்கை நெறியின் மூலம் உங்களது கணனிகளில் ஏற்படும் பிரச்சினைகளை நீங்களே திருத்திக் கொள்ள முடியும்
மட்டுப்படுத்தப்பட்ட பதிவுகள்
Start on : 15-04-06
Batch I : 9.00 am
Batch II : 4.00 pm
#118, பலாலி வீதி, தபாற்பெட்டிச் சந்தி
திருநெல்வேலி
Center for FOSS & LAMP

மாபெரும் கருத்தரங்கு தொடர்கள்
LOGIC
R.P.சர்மா
S.R.J.சுதன்
ஆரம்பம் : 16.04.2006
ஞாயிறு 09.00 A.M
கொழும்பு றோயல் கல்லூரியில் எதிர்பார்க்கை வினாத் தொகுப்புகள்
அளவையியல் சுருக்க கையேடு
அலகு ரீதியான குறிப்பேடு
D.C.M
யாழ்.நகர்
பதிவுகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

உங்கள் அபிமான
நமது ஈழநாடு வாரமலர்
நாளை வெளிவருகிறது
அதிகபக்கங்கள்! அதே விலையில்!!

## கண்ணீர் அஞ்சலி

11.04.2006 செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது பிரதேச கிராமஅலுவலர்
திரு.கோ.சண்முகலிங்கம்
அவர்களின் தாயார் கோபாலு தங்கமுத்து அவர்களின்
மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
நெடுந்தீவு.
[C/5251]

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.04.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# புத்தாண்டு சிறப்பிதழ்

## மலர்ந்துள்ள "விய" வருடமானது மாநிலம் நலம்பெற வழிகாட்டட்டும்.

மேடம் முதல் மீனம்வரை பன்னிரண்டு இராசிகள் உள்ளன. ஒவ்வொரு இராசியும் முறையே சித்திரை முதல் பங்குனிவரை ஒவ்வொரு மாதத்தைக் குறிக்கின்றது. மேடம் முதலாவது இராசி என்று கொண்டு அது குறிக்கும் சித்திரை



முதலாவது மாதமாகக் கொள்ளப்படுகின்றது. முதலாவது இராசியான மேடத்தில் சூரியன் புகும் தொடக்க நாள் சித்திரை முதல் நாள் ஆகும். அந்தச் சித்திரை முதல்நாள் புத்தாண்டு பிறக்கும் நாள். இந்துக்கள் சித்திரை முதலாந்திகதியன்று புதுவருடப் பிறப்பைப் பண்டிகையாகக் கொண்டாடுவதை மரபாகக் கொண்டுள்ளனர்.

புத்தாண்டு பிறப்பதற்கு முன்னும் பின்னும் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியைப் புண்ணிய காலம் என்பர். இப்புண்ணிய காலத்தில் இறைவனை நினைந்து, சங்கற்பித்து மருத்துநீர் தலையில் தேய்த்து நீராடி, புத்தாடை தரித்து திருக்கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து குரு, பெற்றோர், பெரியோர் ஆகியோரை வணங்கி அவர்களின் ஆசிபெற்று இயன்ற தான தருமங்களைச் செய்தல் வேண்டும். வருடம் பிறக்கும் அந்த சுப வேளையை குத்து விளக்கேற்றி, நிறை குடம் வைத்து, புத்தாண்டை வரவேற்பது மரபாக பேணப்பட்டு வருகின்றது. அதி காலையில் நித்திய நைமித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துத் தத்தம் இல்லங்களில் குடும்பத்தவர் சகிதம் சூரியனுக்குப் பொங்கல் பூசைகள் செய்வது இந்துக்களின் வழக்கம்.

நல்ல சுபநேரத்தில் கைவிசேஷம் நடைபெறும். கைவிசேஷம் என்பது வெற்றிலையில் நெல் அல்லது பச்சையரிசி இட்டு அதன் மீது காசு பணம் வைத்துக் குடும்பத் தலைவன் தமது குடும்பத்தவருக்கு வழங்குதல் என்பதைக் குறிக்கும். கைவிசேஷம் பெரியவர்களிடம் பெற்ற பின்னரே கொடுக்கல் வாங்கல் ஏனையோரிடம் செய்யப்படும்.

விருந்துண்ணல், குரு, ராஜ, பிரபு, உறவினர் நண்பர் தரிசனம் என்பன வியாழன், செவ்வாய் தவிர்ந்த நாட்களில் திதி, நட்சத்திரம், யோகம் என்பன சுபமாக உள்ள வேளையில் நிகழ்த்தப்படும். எந்த வேலையையும் நல்ல நாள், முகூர்த்தம் பார்த்து சுபவேளையிலேயே புதுவருடத்தில் தெய்வத்தை நினைந்து தொடங்கும் பாரம்பரியம் கடைப்பிடிக்கப்படுகிறது. இவையனைத்தும் வெறும் சம்பிரதாயங்கள், அர்த்தமற்ற சடங்குகள் என்று கருதிவிடக் கூடாது.

இவற்றுக்குப் பின்னால் பல அர்த்தங்கள், உண்மைகள் உண்டு. இவை வீணானவை என்றால் எப்போதோ மறைந்திருக்கும். இன்றுவரை நிலைத்திருப்பதால் மனிதர்கள் புத்துணர்வும், மகிழ்ச்சியும், புதுத்தெம்பும் பெறுகிறார்கள்.

வாழ்க்கையில் பிடிப்பும், நம்பிக்கையும், திருப்தியும் அடைகின்றார்கள். இவையே போதுமல்லவா. புதுவருடத்தில் பரிமாறிக்கொள்ளப்படும் மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களும், நல்லெண்ணங்களும் வாழ்வில் அமைதியை யும், சாந்தியையும் தரும் என்பது திண்ணம்.

மலர்ந்துள்ள இவ் "விய" புது வருஷமானது மக்கள் வாழ்விலே புதிய மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்க வேண்டும். நீண்ட காலமாக நிலவிடும் சுமுகமற்ற சூழ்நிலைகள் மாற வேண்டும், எதிர்பார்த்திருக்கும் நல்லதோர் தீர்வுகிடைக்க வேண்டும். கல்வி, கலை, பண்பாடு போன்ற மானுடவாழ்வை மேன்மைப்படுத்தும் நிலைகள் நிறைவுகாண வேண்டும். மேலும் எல்லோரும் வாழ்வு பெற இப்புத்தாண்டில் இறைவனைப் பிரார்த்திப்போமாக. ❖

மதுரகவி.
காரை.எம்.பி.அருளானந்தன்.

## தமிழ் கலாசாரப் பண்பாட்டுடன் புது வருடம் சிறப்படைகிறது

இன்று வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டானது சாந்தியும், சமாதானமும் மிளிர்ந்து மக்கள் வாழ்வு ஒளிவிட்டுப் பிரகாசிக்க வேண்டுமென அம்மை அப்ப ரைப் பிரார்த்திப்போமாக!

சூரியன் தன் ஆட்சி வீடான சிங்கத்தில் பிரவேசிக்கின்ற ஆவணி மாதப் பிறப்பை கேரள நாட்டவர்கள் புதுவருடப்பிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். சூரியன் தன் உச்சவீடான மேடத்தில் பிரவேசிக்கின்ற சித்திரை மாதத்தை தமிழர்களாகிய நாம் புத்தாண்டாகக் கொண்டாடுகின்றோம். ஈழத்திருநாட்டின் இரு பெரும் இனங்களும், இரு பெரும் மதத்தினர்களும் இணைந்து கொண்டாடும் பெருவிழா இதுவாகும். கலை, கலாசாரப் பாரம்பரியம், பண்பாடு ஆகியவற்றை பிரதிபலிக்கும் இப்புது வருடம் சிறப்படைகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக தமிழர் - சிங்களவர்கள் என்ற இரு இனங்களிடையே பகைமை உணர்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, விய வருடத்தில் ஏற்படும் சமாதான அமர்வு வெற்றி பெற்று, நாட்டில் சாந்தியும், சமாதானமும் ஏற்பட வேண்டும் என இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை வாழ் சகலமக்களும் சௌபா க்கியங்களைப் பெற்று துன்பங்கள் நீங்கி இன்பப் பேரொளி பெற்று இப்புத்தாண்டு தினத்தில் சமாதானமாக



வாழ வேண்டுமென நல்லாசிகள் கூறி சகல மக்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்து அனைத்துலக சைவக் குருமார் பேரவையினர் இறையருள் வேண்டி நிற்கின்றனர்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

க. சோமசுந்தரக்குருக்கள் J.P
செயலாளர்,
அனைத்துலக சைவக்குருமார்
அர்ச்சகர் பேரவை,
கோப்பாய்.

## விடிகின்ற எமது வானத்தில் என்றுதான் விடிவெள்ளி

தமிழர் திருநாளாக
தமிழர் வாழ்வில்
சித்திரை வருடப் பிறப்பு!
நல்ல விடயங்களைக் கொண்டு
வரும்,
சமூகத்தின் தேடலின் விடுதலையாக
வெற்றிகளை கொண்டுவரும்!
இனிவரும் காலங்கள்
அச்சம் இன்றி வாழ்வதற்கான
ஆரம்ப நாளாக பிறக்கட்டும்!

போர்ச் சூழலில் விலகாத வானம்,
இருள் பரவிக் கொண்டு
எத்தனை வருடங்கள்
நாம் வாழ முடியும்!
ஒவ்வொரு துயரச் சம்பவங்களுடன்
ஒவ்வொரு நாளும்,
விடிகின்ற எமது வானத்தில்
என்றுதான் விடிவெள்ளி!
தமிழருக்கான விடுதலை பிறக்கும்
என்ற நம்பிக்கையில்
ஒவ்வொரு வருடப்பிறப்பும்
ஞாபகப்படுத்திச் செல்லுகின்ற போது
அதற்கான தேடலில்
முழுமை கொண்டு
ஈடுபடுத்திச் செல்கின்ற நாட்களில்
பிறக்கின்ற வருடமாக
இந்த வருடப்பிறப்பும், என்ற நம்பிக்கையில்
எதிர்பார்ப்புடன்
காத்திருக்கின்றோம்!
எமது மண் கோலம் போடும்
அடிச்சுவடியாக
முற்றம் நிலவு கொண்டு வரும்
அழகுச் சுவடியாக.
அம்மா, அப்பா, அண்ணா, தம்பி
தங்கை, அக்கா, பாட்டி, தாத்தா என
பகிர்ந்து கொள்ளும் அன்றைய நாள்
சந்தோஷங்கள் தொலைந்து
நாட்களாகிவிட்டன!

நினைவுக்குள் மட்டும் மனசு ஞாபகப்படுத்தும்
நிகழ்வாக
எத்தனை முறைகள்தான்
நினைவுபடுத்தமுடியும்!
அந்தவாழ்வில் உறவு கொண்டு,
தமிழர் பண்பாடு கொண்டு
எம்மை வளர்க்க வேண்டும்!

பிறக்கும் பல வருடங்களில்
நிகழ்ந்து கொண்டும் ஒவ்வொரு மாற்றங்கள்
எமக்கான பலன்களாகத்தான்
இருக்கின்றன!

இணக்கப்பாட்டுடன் முறிவு கொண்டு
தேடல் காண்கிற தமிழர் உலகம்
பின்னப்பட்ட கயிறாக திரிந்திருந்தும்
விடுபட முடியாமல்
காலங்கள் நகர்கின்ற வலைப்பின்னலில்
சிக்குண்டு... சிக்குண்டு,
விடுபட்டுக்கொண்டும்
ஆழக்கடல் தேடும் படகு போல்
தமிழர் வாழ்வில்
இன்றைய வருடப்பிறப்பு!

நிறைவான பயனை மீட்டுத்தரும்
நம்பிக்கையில்
எதிர்பார்ப்புக் கொண்டு
பொறுமையிழக்காத மனசு
தாங்கிக்கொண்ட அத்தனை துயர்களின்
வடுக்களின்
கறை அழியாமல் வாழ்கின்ற வாழ்வில்
அர்த்தப்படுத்தி விடப்போகின்ற
முடிவாக
இந்த வருடப்பிறப்பும் விளக்கிவைத்த
விளக்காக, ஏற்றி வைத்த
சுடராக வெளிச்சப்படுத்தி நிற்கட்டும்!
பல வருடங்கள் வளர்ந்த
எமது தமிழ் தளிர்களின் சந்ததி
மீண்டும்... மீண்டும் தலைப்படுவது போல்
எத்தனை வருடங்கள் பிறந்தாலும்
எமக்கான வருடப்பிறப்பு எப்பொழுது
பிறக்கப்போகின்றது?

-செல்வா.

## புத்தாண்டே வருக!

தமிழர் தலைநிமிர்ந்து
தாயக உணர்வோடு
தரணியில் வாழ
புத்தாண்டே வருக!

வன்முறைகள் ஒழிந்து
வறுமையினின்று எழுந்திடும்
வளம் கொழிக்கும் வரம் கொண்டு
புத்தாண்டே வருக!

சிறுவர் உரிமை பேணி
சிந்தனைகளை உயர்வாக்கி
சிறுபான்மையினர் நாம் ஒன்றுபட
புத்தாண்டே வருக!



அமலி - இளவாலை

## ஏற்றங்கள் சேர்க்க எழுந்து வா புத்தாண்டே!

எழுந்து வருக புத்தாண்டே!
எங்கள் தேசத்தில் எழுந்து வருக!


தொழுது உன்னை வரவேற்கிறோம் - தமிழரின்
தொன்மை அறங்களைப் பேண வா!

விழுந்து கும்பிட்டு வரவேற்கிறோம் - தமிழரின்
வீர வரலாற்றை காக்க எழுந்து வருக!


பொழுதெல்லாம் புவனமெங்கும் புத்தாண்டே
புதுமைகள் படைக்க எழுந்து வருக!

அழுது கொண்டிருக்கும் அவல வாழ்வை
அவனியில் விரட்ட எழுந்து வருக!

எழுதப் போகும் ஈழவர் வரலாற்றுக்கு
ஏற்றங்கள் சேர்க்க எழுந்து வா!



ஈழத்தரசன்.



# தமிழர்களும் புதிய புத்தாண்டும்

தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இன்று புத்தாண்டு பிறக்கிறது. பெரும்பான்மையினரான சிங்கள மக்கள் இல்லங்களில் குதூகலமாகக் கொண்டாடப்படும் இப்புத்தாண்டு, சிறுபான்மையினரான தமிழ் மக்கள் இல்லங்களில் கவலையும், துன்பமும் கரைபுரண்டோட 'சோக' புத்தாண்டாக கடந்த காலங்களில் மலர்ந்து வந்திருக்கின்றது. இது போன்றே இந்தப் புதிய புத்தாண்டும் தமிழர் இல்லங்களில் குதூகலமாக வரவேற்கப்படமாட்டாது.

என்றாலும் ஒரு சில வீடுகளில் இப் புதிய புத்தாண்டுக்கு வரவேற்பளிக்கப்பட்டு வருகிறது. எனவே வீடுகள் கழுவி, சுவர்களுக்கு வெள்ளையடித்து, முதல்நாளே பெருநாளுக்கென்று பலகாரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

புத்தாண்டன்று அதிகாலை அளவில் எழுந்து நல்ல சுப வேளையில் வீட்டுக்கு முன்னால் சாணம் கொண்டு மெழுக்கிட்டு, அதற்கு மேல் கும்பம் வைத்து புத்தாண்டை வரவேற்கும் வழமை, எத்தனை இடுக்கண் நேர்ந்தாலும் தமிழர் இல்லங்களில் இடம் பெறாமல் இருப்பதில்லை.

அத்துடன் கோயில்களில் இருந்து பெறப்பட்ட மருத்து நீரை வைத்து முழுகி, புத்தாடைகள் அணிந்து, நண்பர்கள், உறவினர்கள் இல்லங்களுக்குச் சென்று புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் வழமை போல் இடம் பெறும்.

ஆனால் சுனாமியால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களிலும், உறவினர்கள் வீடுகளிலும் தங்கி இருக்கும் குடும்பங்களும், சொந்தப் பிரதேசங்களுக்குச் செல்வதற்கு உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்ந்து மக்கள் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டு, தினம் தினம் சில குடும்பங்கள் சொல்லொணா கஷ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள். இவர்கள் வாழ்விலும் இந்தப் புதிய புத்தாண்டு மலர்வை, மகிழ்ச்சியை ஏற்படுத்துமா என்பதே இன்று இடம் பெறும் புதிய புத் தாண்டில் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

புத்தாண்டுத் தினத்தையொட்டி பாரம்பரியமாக தமிழ் மக்கள் மத்தியில் இடம் பெற்று வந்த விளையாட்டுப் போட்டி கள் கூட இன்று மறக் கப்பட்டு வருகின்றன. ஒரு காலத்தில் புத்தாண்டு பிறந்தால் போர்த்தேங்காய் அடித்தல், கிளித்தட்டு, சறுக்குமரம் ஏறுதல் போன்ற பாரம்பரிய விளையாட்டுக்கள் தமிழர் பகுதிகளில் இடம் பெறாமல் இருப்பதில்லை. இன்று அவை கூட மறக்கப்பட்டு வருகின்றன என்பது கவலைதரும் விடயமாகும்.

இப்புதிய புத்தாண்டு எப்படிப் பிறக்கிறது என்பதை ஆராய்ந்து பார்த்தோமானால் - மேட இராசியில் இருந்து மீன ராசிக்கு சூரிய பகவான் எழுந்தருளுகின்ற திருநாளே இந்தச் சித்திரைப் புத்தாண்டாகும். மேடம் என்கிற சூனியத்திலிருந்து மீனராசிக்கு சூரியபகவான் எழுந்தருளுகின்ற இத்தினத்திலேயே பிரமதேவன் தன் படைப்புத் தொழிலை தொடர்ந்தான் எனும் ஐதீகக் கதைகளும் உள்ளன.

பருவங்கள் ஆறு - அவைகளில் சிறப்பு வாய்ந்தது இளவேனிற்காலம். இளவேனிற் காலத்தின் முதல் மாதம் சித்திரை ருதுக்களில் வசந்த ருதுவாக இருக்கிறேன் என்று கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறுகின்றார். நல்லவைக்கெல்லாம் இது ருதுவாகும். அந்த நல்லவைகள் எல்லா நாட்டுக்கும், வீட்டுக்கும், மனித வாழ்வுக்கும் ஆரம்பமாகும் இப் புதிய புத்தாண்டில்.

நாட்டில் போர் முழக்கம் ஓய்ந்தது போல் புரிந்துணர்வு ஒப்பந்தம் என்று எழுத்தில் வடிக்கப்பட்டு, ஆங்காங்கே தமிழ் மக்கள் மத்தியில் வன் செயலுக்கு ஆதரவு வழங்கும் அரசாங்கம் இப்புதிய புத்தாண்டில் மனமாற்றம் அடையுமா? என்பதே இன்றுள்ள முக்கிய கேள்வியாகும்.

**மணியம்**

## பிரியமான வாழ்வுக்கு வழிகாட்டும் புத்தாண்டே!

வருகின்ற 'விய' புத்தாண்டே
விடியலைக் கொண்டு வா!
பயம் போக்கிடும் ஆண்டாக
பாங்குடன் எழுந்து வா!
நிஜமானதோர் வாழ்வுக்கு
நிரந்தரமாக வழிகாட்ட வா!
உயர்வான நெறிகளினை
உலகுக்கு கொண்டு வா!

பண்பாடு பேணிடும் ஆண்டாக
பாரினில் எழுந்து வா!
நின் வரவிலே மானிடர்க்கு
நிம்மதியைக் கொண்டு வா!
அன்னவளே! வியக்கத்தக்க
அற்புதமான ஆண்டாக அமைந்துவிடு!
முன்னவளும் பார்த்திபம்
முடிவொன்றும் தராமல் போகிறாள்!
பின்னவளாய் வருகின்ற "விய" நீ
பிரியமான வாழ்வுக்கு வழிகாட்டு!

**அ.கலாநிதி**

## எப்போதான் திரும்புமோ?



சித்திரைப் பெண்ணேவருக! சிறப்பெலாமிங்கு தருக!
நித்தமும் நல்வாழ்வு நிலைத்திட அருள்வாயே
இத்தரையில் என்றும் இன்னமைதி தருவாயே
சித்திரையாளே வருக! சிறப்பெலாமிங்கு தருகவே!

வெடியோசை யோடிங்கு வேட்டொலிகள் கேட்டு
துடிதுடித்து துவளுகின்ற துயரநிலை அகலாதோ?
மிடியகன்று நாமெல்லாம் மகிழ்வோடு வாழ்ந்திடவே
வெடியோசை அகன்றிங்கு வெண்புறா பறந்திடாதோ?

களவோடு கொள்ளையும் காவாலித் தனங்களும்
அளவின்றிப் போயின அல்லல்தான் பெருகினவே
வளமான வாழ்விங்கு வந்தடைய வாழ்த்தியே
வளமோடு வருவாயே வணங்குகிறோம் "விய"ப் பெண்ணே

இடம் பெயர்ந்து நாம்பட்ட இன்னலெலாம் இனியும்
தொடருமா வெனவிங்கு துவளுகின்றோம் நாமெலாம்
முடமான எம்வாழ்வை முனைப்போடு புதுப்பிக்க
தொடருமா சமாதானம் சொல்வாயே "விய"ப் பெண்ணே



புத்தாடை புதுவணிகள் புத்துணர்வுக் கொண்டாட்டம்
இத்தரையில் நாமெப்போ இனிமையாய்க் காணுவது
எத்தனையோ சித்தரைகள் எதிர்வந்து போயினவே
இத்தரையில் அமைதியது எப்போதான் திரும்புமோ?

**செ.சுதாகரன்**



புத்தாண்டு மலரட்டும், புதுப்பொலிவு திகழட்டும்
முத்தான புதுவாழ்வு முகைவிட்டுச் சிரிக்கட்டும்.

YOGI
Academy of Beauty Culture,
Hair Dressing and Home Science.
No 76, Amman Road,
Nallur, Jaffna
[C/5248]





அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் போட்டோ சிறிலின்
புதுவருட வாழ்த்துக்கள்.
டிஜிற்றல் வீடியோ மொடலிங், போட்டோகிறாப்பி
மற்றும் மணப்பெண் அலங்காரம் என்பவற்றிற்கு
நீங்கள் நாடவேண்டிய இடம்
போட்டோ சிறில்
இன்றில் இருந்து எமது கலைக்கல்லூரியில் நடன,
சங்கீத வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன என்பதனை
அனைவருக்கும் தெரியப்படுத்துகின்றோம்.





No.55, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
T.P: 0773223100
உரிமையாளர் :
சிறில் ராஜபேட்
[C/5250]

RAMCO CEMENT
ராம்கோ சீமெந்து
RAMCO CEMENT
மலரும் புத்தாண்டில் அனைவரது உள்ளங்களும் மலர வாழ்த்துகிறோம்.
ஆசியாவின் முதல் தர (நம்பர்-1)
தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட
தொழிற்சாலையில் உற்பத்தி
செய்யப்படும் ராம்கோ சீமெந்தினை
நேரடியாக குடாநாட்டுக்கு இறக்குமதி செய்து
குடாநாட்டு மக்களின் பல கோடி
ரூபாய் பணத்தை மீதப்படுத்தினோம்.
SLS - 107 அங்கீகாரம் பெற்றது
ISO - 9002 தரம் பெற்றது
BSS-12 - 1991 தரத்திற்கு அமைவானது
ராம்கோ சீமெந்து ஏகஇறக்குமதியாளர்கள்
ஈஸ்வரகுமான் & கொம்பனி
இல 91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P-021-2222350
குறிப்பு: முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு நேரடியாக ராம்கோ சீமெந்து விநியோகிக்கப்படும்.
RAMCO CEMENT
RAMCO CEMENT
[C/5249]

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

# SRI KUMARAN HARDWARES

DELEARS IN: Building Materials

Asbestos sheets, Cements, Round iron, Tore steel, Angle iron, Flat iron, G.I.Pipes, Etc.]

83, Stanley Rd, Jaffna.
Telephone: 222 2798

C/S223

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்





நவீன முறையில் கண்களைப் பரிசோதித்து சிறந்த
கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும், இழந்த பற்களுக்கு நிகரான
சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ளவும், பொருத்திக்கொள்ளவும்,
உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக் கொள்ளவும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

# எிக்கலைவ்

564, 566 ஆஸ்பத்தரி வீதி,
யாழ்ப்பாணம்.

இல 91, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

இல 80, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.

C/S224

சிரிக்கச் சிரிக்க மொழி பேசி
சித்திரைப் பூவே மலர்ந்திடுவாய்
தரமான வோல் ரைல்ஸ், புளோர் ரைல்ஸ்,
குளியலறைப் பொருட்களை
கடந்த 25 வருடங்களாக விற்பனை செய்பவர்களும்
மற்றும் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
கிளாஸ் வகைகள், அன்பளிப்புப் பொருட்களின்

முன்னோடி
விற்பனை நிலையம்

# விமாகி

யாழ் நகரில்
27/3, மின்சார நிலையவீதி
யாழ்ப்பாணம்.
T.P : 021 2226738

C/S226

# ஆர்த்தி ரெக்ஸ்

33, நவீனசந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்
மனங்கவர் டிசைன்களில்
* சாறி வகைகள்
* பிளவுஸ் துணிகள்
பஞ்சாபி, சோலிகிற், ஸ்கேட் அன் பிளவுஸ்
சேட்டிங் சூட்டிங் றெடிமேட் ஆடைகள் அனைத்திற்கும்

# ARTHTHY TEX

33 NEW MARKET, (INSIDE)
JAFFNA
T.P 222 8400

C/S236

மலரும் புத்தாண்டில் அனைவரது உள்ளங்களும்
மலர வாழ்த்துகின்றோம்

சகலவிதமான அச்சு வேலைகளையும் வேண்டிய வர்ணத்தில்
சிறந்த முறையில், குறித்த தவணையில் தரமாகவும், மலிவாகவும்
உங்கள் எண்ணம் போல் செய்து பெற்றுக்கொள்ள
அனைவரும் நாடும் இடத்தை நீங்களும்
நாடிப் பாருங்கள்

# துபா அச்சகம்

கொம்பியூட்டர் ஓவ்[f] செற் பிரிண்டேர்ஸ்
138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P 222 2881

C/S228

மலரப்போகும்
இனிய புத்தாண்டு
வாழ்த்துக்கள்

வெற்றுச்சாக்கு, வெற்று உரப்பைகளை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
வாங்கவும், விற்கவும் நாடவேண்டிய
இடம்

# இராமராஜ் அன் சன்ஸ்

அரிசி ஆலைக்குத் தேவையான புதிய 10 கிலோ, 50 கிலோ பாக் (Bag)
குறைந்த செலவில் அச்சுப்பதிவு செய்து கொடுக்கப்படும்.

603, கே.கே.எஸ் றோட்
யாழ்ப்பாணம்.

கிளை நிறுவனம்: யாழ்.அருள்சந்தி,
கண்டி சாலை,
கிளிநொச்சி.

C/S238

மலரும் புத்தாண்டு வாழ்த்துக்கள்
சகலவிதமான கணனி மூலமான அச்சுப்பதிப்பு வேலைகளை
உடனுக்குடன் தரமாகவும், மலிவாகவும் செய்து பெற்றுக்கொள்ள
இன்றே நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

# கங்கை ஓவ் செற் பிறின்டேர்ஸ்

781, K.K.S வீதி,
[யாழ்.இந்துக் கல்லூரி அண்மையில்]
சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம்.

C/S237

துன்பம் நீக்கி, துயர்களைப் போக்கி, உயர்வினைத் தந்திட வரும் விய புத்தாண்டில்
அனைவரையும் வாழ்த்துகிறோம்!

## இவ்வருட புதுவருட கொடுக்கல் வாங்கலுக்கு மக்கள் வங்கியின் உற்சாகமான உபசரிப்பு!

புதுவருடத்தில் வழமைபோல் மக்கள் வங்கியுடன் கொடுக்கல் வாங்கல் செய்து, முழு வருடத்தையும் அதிர்ஷ்டம் உள்ளதாக்கிக் கொள்ளுங்கள். அழகிய பரிசொன்றையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

- புதுவருட கொடுக்கல் வாங்கலின் போது ரூ 20,000 சேமிப்பு சான்றிதழுக்கு, முழு குடும்பத்துக்கும் ஏற்ற அழகிய வெந்நீர்ப் போத்தல்
- அனைத்து கொடுக்கல் வாங்கல்களுக்கும் பரிசுகள்.

புதுவருட சுபநேர கொடுக்கல் வாங்கல்களுக்காக ஏப்ரல் 14 ஆம் திகதி காலை 8.00 மணி முதல் எமது அனைத்து மக்கள் வங்கிக் கிளைகளும் உங்களுக்காகத் திறந்திருக்கும்.




சித்திரை வருடப்பிறப்பு கருமம் (வாக்கிய பஞ்சாங்கப்படி)
"விய" வருடம் 14.04.2006 வெள்ளிக்கிழமை
காலை 4.31 மணிக்குப் பிறக்கிறது.
புண்ணியகாலம் - 14.04.2006 காலை 4.31
தொடக்கம் காலை 8.31 வரை

கைவிசேடம் - 14.04.2006 காலை 8.01 தொடக்கம் காலை 9.52 வரை
விருந்துண்ணல் - காலை 4.31 தொடக்கம் காலை 8.31 வரை
உடுத்தும் ஆடை வெள்ளைப் பட்டு மஞ்சள் கரையுடன் கூடியது.

C/S244

மங்கலம் பொங்கிட வருக புத்தாண்டே
மகிழ்வுடனை வாழ்த்தினோம் இனிய புத்தாண்டே
வடபகுதியின் ஏக விநியோகஸ்தர்களான
சிவகுரு கட்டடப்பொருள்
உந்துருளி வாணிபத்தில்
TVS
உமாசாக்
டைடோ
பஜாஜ்



என்பன மிகக்குறைந்த விலையில் விற்பனையாகின்றன
இவற்றிற்கு



இலவச சேவிஸ்
யக்கட்
கெல்மெட்
என்பன வழங்கப்படும்
கையிருப்பிலுள்ள TVS Qx, QLX
மோட்டார் சைக்கிள்கள் கொள்முதல் செய்யும் பொழுது
ரூபா 5000/- விலையுள்ள கைக்கடிகாரம்
வழங்கப்படும்.

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
நல்லையம்பதியில்...
அன்பளிப்புப் பொருட்கள், வீடியோ,
ஓடியோ கசெற்றுகள் பெற்றுக்கொள்ளவும்
வெளிப்புற படப்பிடிப்பு
(OUTDOOR SHOOTING)
சிறந்த இடம்
S.R.வீடியோ அன் ஓடியோ
(நல்லூர் சிவன்கோவில் முன்பாக)
421 A, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
T.P 0773620793

அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
PILLAIYAR INN
& Garden Restaurant
பிள்ளையார் இன்



'A' உல்லாசப் பயணிகள் தங்குமிடம்
(A Grade Hotel Approued by the Ceylon Tourist Board)
புத்தாண்டு தினத்தை முன்னிட்டு றூவ் காடின் றெஸ்ரோறன்ட், காடின் றெஸ்ரோறன்ட், கொபி சொப் றெஸ்ரோறன் யாவும் காலை 10 மணி முதல் இரவு 11 மணி வரை திறந்திருக்கும்!
உங்களின் திருமண வைபவங்கள்,பிறந்தநாள் விழா மற்றும் வியாபார கலந்துரையாடல்கள், திருமண விருந்துகள் (Reception), விசாலமான வாகனத்தரிப்பிடம் 16A/C room, நாவுக்குச் சுவையான உணவு வகைகள் தயாரித்து வழங்கப்படும்.
குறிப்பாக 1 மணித்தியாலத்துக்கு முன்பாகவேனும் ஓடர் பண்ணிவிட்டு வரவும்.
Pillayar Inn
31, Manipay Road,
Jaffna.
Tel 021-222-2829
021-222-5595
Fax 021-222-2829

மனமகிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
பருப்பின்றி கலியாணமா?
புத்தாடை இன்றிப் புதுவருடமா? பவானி விலாஸ்
கச்சான் அலுவா இன்றிக் கொண்டாட்டம் குதூகலிக்குமா?
சாத்தியமே இல்லை. பண்டிகை சிறக்க, கொண்டாட்டம்
குதூகலிக்க இன்றே கேட்டு வாங்குங்கள்.
பவானி விலாஸ் உற்பத்திகள்
சுத்தம் - நிரந்தரம்
சுவை - அதிவிசேடம்
பவானிக்கு நிகர் பவானியே
அதனால் பவானி வழி
தனி வழி.
பவானி விலாஸ்
- கச்சான் அலுவா
- எள்ளு உருண்டை
- கடலைப் பருப்பு
- பொரி கடலை
- இனிப்பு வகைகள்
பவானி விலாஸ்
S.தனராஜா
32/1, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
தொ.பே 222 3138,
0773024257
விளம்பர வடிவமைப்பு
மணிக்குரல்
V.S சற்குணன்.

புதிய புத்தாண்டே! அஞ்சிய மனங்களுக்கு ஆதரவு தரவா! துஞ்சிடோமினித் துணையாக நீ வா!
MOIL
சுத்தமான நல்லெண்ணெய்
தரமான எள்ளில் சுத்தமாகத் தயாரிக்கப்பட்டது.
ஆரோக்கியமான வாழ்வுக்கு என்றும் நினைவில் நிற்பது
எமது தயாரிப்புகளே!
PURE GINGELLY OIL
A PRODUCT OF MULTI - OIL INDUSTRIES
INUVIL, SRI LANKA

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்.
புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், வாழ்த்துமடல்கள், சஞ்சிகைகள்,
பத்திரிகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல 04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Devi Hotel
GUEST HOUSE
Restaurant





A.C
Non A.C Rooms
37, kachcheri,
Nallur Road,
Jaffna.

வளமும் பெருகி வாழ்க்கையும் சிறக்க புதியதோர் ஆண்டில் வாழ்த்துகிறோம்.
- பாடசாலை, பல்கலைக்கழக புத்தகங்கள்
- அலுவலக அலுமாரிகள் புத்தக றாக்கைகள்
- ஆய்வுகூட உபகரணங்கள்
- நுணுக்குக் காட்டிகள்
- அழி பொருட்கள்
- தர உள்ளீட்டு பொருட்கள்
- விளையாட்டுப் பொருட்கள்
- O.H.P புறொஜெக்ரர்கள், றோணியோ மெசின்கள்
- வாத்தியக் கருவிகள்
- கணினி நூல்வகைகள்

யாவற்றையும் நீங்கள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
சமுத்திரா ரேடேஸ் லிமிட்டட்
117, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021-2222938
[C/5242]

துன்பங்கள் கழிந்தது, துயரினி மறைந்தது வருக புத்தாண்டே! வாழ்வு சிறந்திட
பாடசாலை உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள்,
கணினி சம்பந்தமான நூல்கள், மருத்துவ மாணவர்களுக்கான
நூல்கள் மற்றும் பாடப் புத்தகங்கள் என்பவற்றைப் பெற்றிட
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 2225542

புத்தாண்டில் புத்தாடை அணிந்து புதுப்பொலிவுடன் திகழ வாழ்த்துகிறோம்
அன்று முதல் இன்று வரை
அனைத்து ஆடைகளையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள சிறந்த ஒரே
ஸ்தாபனம்
சீமாட்டி புடவைக் கடல்
இல 122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


"சோலைக் குயில் கூவும் ஒலி
காற்றினிலே குலாவும், இருளகலும்
ஒளியினிலே முகமலரும் அதாலே
மேள தாளம் மணி ஒலிக்க
புதுவருடம் இதோ பார்
உங்கள் நலம் சௌபாக்கியம்
அதுவேயெம் மன வாஞ்சை"
கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.


சித்திரைப் புத்தாண்டில் சிந்தையில் நல்லதை எண்ணி சிறப்புற வாழ வாழ்த்துகிறோம்
SIVAN MOTOR STORES
சிவன் மோட்டார் ஸ்ரோர்ஸ்
ICI
10 LITRES
ICI
Strategic Sponsors of the SRI LANKA INSTITUTE OF ARCHITECTS
Dulux
Pentalite Plus
LOW SHEEN EMULSION
EXTRA HIDING
COVERED MORE
SAVE MORE
WHITE
Bx5661/1105 Rs.3505.00
Single Coat Application if thinned upto 25%
NO ADDED LEAD
NO ADDED MERCURY
ISO 9001:2000
PAINTS & GENERAL INDUSTRIES LTD
No:70/1, Manipay Road, Jaffna.
T.P : 021 - 222 2763

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.
விநியோகஸ்தர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் மற்றும்
அனைவருக்கும் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவ வாழ்த்துகிறோம்
M.G.M DISTRIBUTORS & CO
279, Wolfendhal 1 street,
Colombo 13,
Sri Lanka.
Te : 2338727
Mohammedi Grinding
Mills & Stores
777, K.K.S. Road,
Jaffna.
Te : 021-2227894
C/5222



அனைவருக்கும் மலரும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
நாளெல்லாம் புத்துணர்ச்சியுடன்
இருக்க அருந்துங்கள் அன்னா கோப்பி
ANNA
வளரும்
குழந்தைகளுக்கும்,
கர்ப்பிணித் தாய்மாருக்கும்
சிறந்த போசாக்கு மிக்க உணவு
ஜீவாகாரம்
மேலும் உங்கள் சமையலை இலகுவாக்கி, விரைவாக
உணவு தயாரிக்க அண்ணாவின் தயாரிப்புக்கள்...
- அண்ணா வறுத்த அரிசி மா
- அண்ணா உழுந்து மா
- அண்ணா தோசை மா
- அண்ணா வறுத்த உழுந்து மா
- அண்ணா ஆட்டா மா
- அண்ணா குரக்கன் மா
- அண்ணா கடலை மா
- அண்ணா அப்பம் மா
- அண்ணா புழுக்கொடியல் மா
- அண்ணா ஒடியல் மா
- அண்ணா கறிமிளகாய்த் தூள்
- அண்ணா தனிமிளகாய்த்தூள்
- அண்ணா சரக்குத் தூள்
- அண்ணா மஞ்சள் தூள்
- அண்ணா மிளகுத் தூள்
- அண்ணா சீரகத் தூள்
- அண்ணா பற்பொடி
- அண்ணா ஊதுபத்தி வகைகள்
- அண்ணா ரொபி வகைகள்
- கஸ்தூரி சீயாக்காய் பவுடர்

அண்ணா தொழிலகம்
துரைவீதி, இணுவில்
021-2223565
C/5227

அனைவருக்கும் மலரும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
அன்றும்! இன்றும்! என்றும்!
R.V.G BEEDIES
இதமான புகை இன்பத்துக்கு...
ஆர்.வி.ஜி
பீடிகள்
ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச் சத்து பால்மா வகைகள் என்பவற்றை நியாய விலையில் பெற்றுக்கொள்ள
R.V.G மெடிக்கல்ஸ்
இல.504, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
T.P : 021 - 222 2129
ஆர்-வி-ஜி-பீடி ஸ்தாபனம்,
இல. 58, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 - 222 6806
C/5220

உழைப்பின் கரத்தைப் புரிந்திடுவீர்
உலகில் உன்னதம் கண்டிடுவீர்
இலங்கை வங்கியில் இணைந்திடுவீர்
இன்பமே வாழ்வில் அடைந்திடுவீரென
சித்திரை நாளில் வாழ்த்துகின்றோம்
- இளம் பருவத்தினரின் சேமிப்புக் கணக்கு
- 1 லட்சம் ரூபா வரையிலான சுகாதாரக் காப்புறுதி
- முதல் குழந்தைக்கு ரண் கெகுளு கணக்கு
- உயர்கல்விக்கான புலமைப்பரிசில்
- உயர் வட்டி
- திருமண நாளில் ஒரு பவுண் தங்கப் பரிசு
- ரூபா 5 லட்சம் வரையிலான ஆயுள் காப்புறுதி
- Visa electrons & credit card
- வங்கி கடன் வசதி

மேலதிக விபரங்களுக்கு :
அருகிலுள்ள கிளை முகாமையாளருடன்...
BOC
இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி






மலரும் விய வருடத்தில் தமிழ் பேசும் உள்ளங்களுக்கு வாழ்த்துக்கள்
தரமான, சுவையான, சுகாதார முறைப்படி
தயாரிக்கப்பட்ட சைவ உணவு வகைகளையும்,
சிற்றுண்டி வகைகளையும் எங்கே வாங்கிக் கொள்வது என
நினைக்கிறீர்களா?
நினைத்ததும் விரையுங்கள், சுவையுங்கள்.
ஸ்ரீ தாமோதர விலாஸ்
401, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 222 6867
C/5221

இன்பம் பொங்கிட இனிய புத்தாண்டே! எங்கும் நிறைந்திட எழிலாய் வந்திடு!
ஏ.சி.எல் வயர், சொங்கி சுவிச், ரியுப் பிற்றிங்,
மற்றும் மின்சாரப்பொருட்கள் எஸ்லோன் பைப்
வகைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
நியூரோன் எலெக்ரிக்கல்
இல:440, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 - 222 203
C/5240


அனைவருக்கும் எமது தித்திக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்
வெலா சலூன்
WELLA
WELLA HAIR DRESSING
(குளிரூட்டப்பட்டது)
Hair cuts, Facials, Stranghting
சலூனுக்கு தேவையான உபகரணங்களும்
விற்பனைக்குண்டு.
இல 08, பருத்தித்துறை வீதி,
நல்லூர் மாக்கெற், கல்வியங்காடு.
T.P 0773144965
C/5235

மலரும் புத்தாண்டு அனைவருக்கும்
மகிழ்வாய் அமைய
வாழ்த்துகிறோம்
வேலவன் மிக்சர்
630, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
C/5229


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஆண், பெண்
இருபாலாருக்குமான கைக்கடிகாரங்கள்,
T.V. டெக், குளிர்சாதனப் பெட்டிகள்
மற்றும் இலத்திரனியல் பொருட்கள்
என்பனவற்றை மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்





யாழ்.இலத்திரனியல் உலகம்




முருகன் கோவில் அருகில்
(ஈழநாதம் பணிமனை முன்பாக)
யாழ்.சாலை, கிளிநொச்சி.

வங்கிகள், திணைக்கள அதிகாரிகள்,
பணியாளர்கள், ஊழியர்கள், எமது நிறுவன
பணியாளர்கள், தொழிலாளர்கள், ஊழியர்கள்,
வர்த்தகர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்




S.M.S என்ஜினியர்ஸ்,
கண்டி வீதி,
கிளிநொச்சி.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்,
அனைவருக்கும் எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
உங்களின் அனைத்து வகை தளபாட தேவைகளையும்
நிறைவு செய்ய வேண்டுமா?



- பிளாஸ்ரிக் கதிரைகள்
- மெத்தை வகைகள்
- உருக்கு அலுமாரிகள்
- குசன் கதிரை வகைகள்
- அலுவலக மேசைகள்
- மரத்தினாலான கதிரை வகைகள்
- சிறுவர்களுக்கான அனைகலன்கள்
- பிரம்பு வகைகள்
- வீட்டுத் தேவைக்கான பிறபொருட்கள்



என்பவற்றை உங்கள் மனம்போல் தெரிவுசெய்ய
நாடவேண்டிய ஒரே இடம்



வள்ளல் தளபாட மாளிகை




148, கண்டி வீதி,
கிளிநொச்சி. [C/4469] தொலைபேசி: 021-2285790

எமது நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்



எம்மிடம் சகல வாகன உதிரிப்பாகங்கள்,
கட்டட உதிரிப்பாகங்கள், அரிசி ஆலை
இயந்திர உதிரிப்பாகங்கள், தச்சு வேலை
இயந்திர உதிரிப்பாகங்கள், விவசாய உதிரிப்பாகங்கள்,
KEN இயந்திர உதிரிப்பாகங்கள், லான்மாஸ்ரர்
உதிரிப்பாகங்கள், நீர் இறைக்கும் பைப்வகைகள்,
தண்ணீர்க்குழாய் இயந்திர எஸ்லோன் சகல
உதிரிப்பாகங்கள் மற்றும் முட்கம்பி வகைகள்,
வீட்டு கூரைத்தகடுகள்,
ஜெனரேட்டர் என்ஜின்கள், பற்றி சாஜ்ஜர்கள்,
டிலிவரி பைப் வகைகள்,
அனைத்தையும் மலிவான விலையில்
ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள







பிள்ளையார் மில்ஸ்ரோர்
உதிரிகள் வாணிபம்



கந்தசாமி கோயில் முன்பாக
யாழ் சாலை,
கிளிநொச்சி. [C/4460]
கிளை: மல்லாவி



# ஒரு இலவச IDD போன் கார்ட்

இப்புத்தாண்டில் ஒவ்வொருமுறை* நீங்கள் வெஸ்டர்ன் யூனியன் மூலம் பணம் பெற்றுக் கொள்ளும் போதும் இந்த போன் கார்ட் இலவசமாக செலான் வங்கியினால் வழங்கப்படுகிறது.

வெளிநாட்டிலிருக்கும் உங்கள் அன்புக்குரியவர்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ள பாதுகாப்பான வழி.




WESTERN UNION®
மணி டிரான்ஸ்பர்

Hotline: 2452666

செலான் வங்கி
அன்புடன் ...

*இந்தக் கொடுப்பனவு கையிருப்பு முடியும் வரை மட்டுமே. இது ரூ. 250 பெறுமதியானது.
இது சம்பந்தமான எந்தப் பிரச்சினையும் சேவையாளர்களால் தீர்த்து வைக்கப்படும்.